Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, DECEMBER 13, 2024

வெள்ளிக்கிழமை டிசெம்பர் 13, 2024 | ஒளி: 10 கதிர் 114 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## நால்வரின் பெயர்களை அனுப்பியது டெலிபோன்




ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் ஊடாக நியமிக்கப்படவேண்டிய நான்கு உறுப்பினர்களின் விபரங்கள், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நெடுஞ்சாலை விபத்தில் சகோதரிகள் மரணம்



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில்கார் ஒன்று லொறியுடன் மோதியதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் உயிரிழந்துள்ளனர். அந்த சம்பவத்தில் காயமடைந்த அவ்விரு சகோதரிகளின் தாய், தந்தை ஆகிய இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து பின்னதுவ மற்றும் இமதுவ நுழைவாயில்களுக்கு இடையில், புதன்கிழமை(11) இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மாத்தறை நுபே பகுதியைச் சேர்ந்த சதீஷா (12) மற்றும் அவரது ஒரே சகோதரி செனுதி தம்சரா (10) ஆகிய இருவருமே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த சிறுமிகளின் பெற்றோர், கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த சிறுமிகளின் தாயார் மாத்தறை புனித தோமஸ் பிரின்ஸ் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகவும் தந்தை மின்சார சபையில் உயர் அதிகாரியாகவும் கடமையாற்றுகின்றார்.

விபத்தில் உயிரிழந்த மூத்த பெண் தனது சுகயீனத்திற்காக நாரஹேன்பிட்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் வைத்தியரைப் பார்த்துவிட்டு மாத்தறை வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.



### மஹிந்த,மைத்திரி, சந்திரிகாவின்
## பாதுகாப்பு குறைப்பு

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கை 60 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு நிலை அறிக்கைகளை ஆராய்ந்ததன் பின்னர் இந்த நடவடிக்கையை பதில் பொலிஸ் மா அதிபர் எடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



### ஐ.ம.சவின்
## தேசிய பட்டியலுக்கு தடையுத்தரவு

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதி ஒருவரை இணைத்துக் கொள்ளாமல் நால்வரின் பெயர்களை பரிந்துரைப்பதற்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவை, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு வியாழக்கிழமை (12) பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூக் ஹக்கீம் தாக்கல் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சித் மத்தியம் பண்டாரவை எதிர்வரும் 26ஆம் திகதி நீதிமன்றத்தில் சாட்சியமளிக்குமாறு மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி சாமரி வீரசூரிய உத்தரவிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதியான.நிசாம் காரியப்பரை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி ஒன்றுக்கு பெயரிடாமல் தேசியப் பட்டியல் தயாரிப்பதைத் தடுத்து மாவட்ட நீதிமன்ற நீதவான் இந்த தடையுத்தரவை பிறப்பித்துள்ளார்.

## தந்தை வெட்டிய கிளை விழுந்ததில் மகன் பலி

தந்தையால் வெட்டப்பட்ட பலா மரத்தின் கிளை ஒன்று தலையில் வீழ்ந்ததில் அவரது மகன் உயிரிழந்துள்ள சம்பவமொன்று இரத்தினபுரி , கொடகவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்மடுவ பிரதேசத்தில் புதன்கிழமை (11) மாலை இடம்பெற்றுள்ளதாக கொடகவெல பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## 4/21 வழக்கை விசாரிக்க உத்தரவு

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் (4/21) பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்திருந்த வழக்குகளை தள்ளுபடி செய்யுமாறு முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோரின் கோரிக்கையை நிராகரித்த நீர்கொழும்பு மாவட்ட நீதவான் லலித் கன்னங்கர, அனைத்து வழக்குகளையும் விசாரிக்குமாறு புதன்கிழமை (11) உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## யானைக்கு வாழைப்பழம் கொடுத்த பெண் பலி

சுமனசிறி குணதிலக்க

கோனகனார பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தல கதிர்காமம் வீதியில் கதிர்காமம் நோக்கி பயணித்த லொறி யானையால் கவிழ்ந்ததில், அந்த லொறிக்குள் அகப்பட்ட பெண் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளதாக கோனகனார பொலிஸார் தெரிவித்தனர்.

முதுகண்டிய மீனவ கிராமத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தாயாரான கே.ஜி.கெரசுதி (66) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் , கிராமத்தைச் சேர்ந்த குழுவினருடன் லொறியில் கதிர்காம யாத்திரைக்குச் கடந்த (12) சென்று கொண்டிருந்த போது வீதியை மறித்து கொண்டு காட்டு யானைக்கு நின்று கொண்டுள்ளது. .

வாழைப்பழம் சீப்பு விடுக்கப்பட்டதை அடுத்து, காட்டு யானை, லொறியில் இன்னும் உணவுகளை தேடியது. உணவுகள் கிடைக்காமையால், தனது தனது தும்பிக்கையை லொறியை புரட்டியது.

தொடர்ச்சி P2



## முஸ்தபாவின் பெயரால் குழப்பம்


முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் (சிலிண்டர் சின்னம்) தேசியப் பட்டியல் ஆசனத்துக்காக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் சட்டத்தரணி பைசர் முஸ்தபாவின் பெயர் தொடர்பில், அந்த கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கூட்டணி கட்சிகளுடன் கலந்துரையாடாமையும் தற்போது சர்ச்சையாக உருவெடுத்துள்ளது.

இந்நிலையில், புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் ஆசனத்துக்காக முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேக்கரவை நியமிக்க கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அங்கிகாரம் வழங்கியிருந்தனர்.

தொடர்ச்சி P2

### தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில்
## போதையில் இருந்த இ.தொ.க உறுப்பினர் சிக்கினார்



எஸ்.சதீஷ்

ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய நான்கு மாடி கட்டிடத்தின் அறையில் மதுபோதையில் தங்கியிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் பெருந்தோட்டம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சந்தரலிங்கம் பிரதீப்பிடம் புதன்கிழமை (12) கையும் களவுமாக மாட்டிகொண்டார்.

தொடர்ச்சி P2

### 15 வயது சிறுமி துஷ்பிரயோகம்
## குற்றவாளிக்கு 30 வருட சிறை

எஸ்.கீதபொன்கலன், அ.அச்சுதன்

15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை குற்றவாளியாக இனங்கண்ட, திருகோணமலை மேல் நீதிமன்றம் குற்றவாளிக்கு 30 வருட சிறை தண்டனையும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறும் புதனன்று(11) தீர்ப்பு வழங்கியது.

திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயதான சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபருக்கு எதிராக திருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

குறித்த வழக்கானது விசாரணைகள் முடிவுற்று புதனன்று(11) தீர்ப்பு வழங்கப்பட்டபோதே மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லா குற்றவாளிக்கு 30 வருட சிறை தண்டனையும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு தீர்ப்பு வழங்கியிருந்தார்.



தொடர்ச்சி P2

## "அனைத்து தமிழ்கட்சிகளும் ஒருதரப்பாக பயணிக்க வேண்டும்"

க. அகரன்



புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு இனப்பிரச்சனைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக இருக்கிறது.

தொடர்ச்சி P2

## மட்டக்களப்பிலும் எலிக்காய்ச்சல் எச்சரிக்கை



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

லிக்காய்ச்சல் நோயின் தாக்கம் எந்த நேரமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய அளவில் அதிகரிக்க கூடிய வாய்ப்புள்ளதாகவும் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 74 பேர் எலிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டதாகவும்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# யானைக்கு வாழைப்பழம் கொடுத்த பெண் பலி




இதன்போது முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த பெண் உடல் நசுங்கி பலத்த காயங்களுடன் புத்தள பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை மற்றும் பிரேத பரிசோதனை மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைபெற்றது.

# குற்றவாளிக்கு 30 வருட சிறை

இவ் வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமியின் சார்பாக அரச சட்டத்தரணி நசிகேசன் முன்னிலையாகி இருந்தார்.

சம்பூர் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபரினால் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதியில் இருந்து மே மாதம் வரையான காலப்பகுதியில் குறித்த சிறுமி மூன்று முறை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்ததாக விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

அந்தவகையில் ஒருமுறை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றத்துக்காக 10 வருடங்கள் சிறை தண்டனை என்ற அடிப்படையில் 30 வருடங்கள் சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நட்டஈடாக ஒரு குற்றத்திற்காக தலா ஒரு இலட்சம் வீதம் மூன்று இலட்சம் ரூபாய் வழங்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இத்தகைய தீர்ப்புகள் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் குற்றங்களை குறைப்பதற்கு உதவும்.இதுபோன்ற கடுமையான தண்டனையை திருகோணமலை நீதிமன்றில் மிக நீண்ட காலத்திற்கு பின்னர் வழங்கப்பட்டுள்ளது. தண்டனைகள் அதிகரிக்கும் போது தான் குற்றங்கள் குறையும்.எனவே இதுபோன்ற தீர்ப்புகளை வரவேற்பதாக இத் தீர்ப்பு தொடர்பில் சமூக நலன் விரும்பிகள் கருத்து தெரிவித்தனர்.

# முஸ்தபாவின் பெயரால் குழப்பம்

எனினும், புதிய ஜனநாயக முன்னணியின் கூட்டணி கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு சட்டத்தரணி பைசர் முஸ்தபாவின் பெயரை முன்மொழிந்துள்ளதாக கூறப்படுகிறது. இவ்வாறனதொரு பின்னணியில், புதிய ஜனநாயக முன்னணி கட்சிக்குள் பிரச்சினைகள் உருவாகியுள்ளன. இதன் கூட்டணி கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகளின்படி, எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணி தேசியப் பட்டியலில் இரண்டு ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்தது. இதில் ஒரு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பல்வேறு கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியில், ரவி கருணாநாயக்கவை நியமிக்க கட்சியின் செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

தற்போது, மீதமிருந்த மற்றைய பதவிக்கு ஜனாதிபதியின் சட்டத்தரணி பைசர் முஸ்தபாவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதையில் இருந்த இ.தொ.க உறுப்பினர் சிக்கினார்

நீண்டகாலமாக பாவனைக்கு உட்படுத்தப்படாத குறித்த கட்டித்தை பிரதி அமைச்சர் பார்வையிட்ட போது இந்த சம்பவம் இடம்பெற்றது.

நீங்கள், இங்கு இருப்பதற்கு என்ன காரணம் என அமைச்சர் கேட்டபோது, தனக்கு சுகயீனம் காரணமாக இங்கு தாம் இளைப்பாரி கொண்டிருப்பதாக மாட்டிக்கொண்ட உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இந்த கட்டிடத்தில் இளப்பார முடியாது எனவும் தங்களின் உடல் நிலை சீராக இல்லாவிட்டால் வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற முடியும் தொழில் நேர காலப்பகுதியில் இது போன்ற விடயங்களை உள்வாங்க முடியாது. ஆகையால் குறித்த நபருக்கு எதிராக நடவடிக்கையை மேற்கொள்ள இருப்பதாக பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்

இதேவேளை குறித்த கட்டிடத்தில் உள்ள அறைகளில் மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படாமல் இருந்த உபகரணங்கள் சிலவற்றை இனங்கான முடிந்தது. மக்களிடம் செல்ல வேண்டிய உபகரணங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் குறித்த கட்டிடத்தில் உள்ள சில அறைகளை பார்வையிட வேண்டும் என அமைச்சர் கோரிய போதும் ஒரு சில அறைகளுக்கு எம்மிடம் சாவிகள் இல்லையென பதில் வழங்கியதை அடுத்து இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கப்பட உள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பிலும் எலிக்காய்ச்சல் எச்சரிக்கை

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ. முரளிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக எலிக்காய்ச்சல் பற்றி விவசாயிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும், அவர் கேட்டுக்கொண்டார்.

அவர் விடுத்துள்ள முன்னெச்சரிக்கை அறிவிப்பில், பொதுமக்களும் எலிக்காய்ச்சல் சம்பந்தமாக எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். வயல்களிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வசிப்பவர்களை இந்த நோய் பெரிதும் பாதிக்கிறது. வயல்களில் காணப்படுகின்ற வெள்ள நீர் அல்லது அப்பகுதியில் காணப்படுகின்ற கிணறுகளில் கலக்கின்ற நீர் நிலைகளில் இருந்து எலிக்காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் காணப்படுகிறது. இதனால் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பாக விவசாயிகள், நீர் நிலைகளில் குளிப்பவர்கள் நீரைக் குடிப்பவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து இருக்க வேண்டும், கூடியளவு இவ்வாறான பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் கொதித்தாறிய நீரை குடிக்க வேண்டும், அப்பகுதிகளில் வயல்களில் இறங்கி வேலை செய்பவர்கள் போதிய பாதுகாப்பு அங்கிகளுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த எலிகாச்சல் நோய் சம்பந்தமான மேலதிக தகவல் தேவைப்படுபவர்கள் அண்மையில் உள்ள எமது சுகாதார அலுவலகத்தை நாட முடியும் எனவும் வைத்தியரின் ஆலோசனையுடன் நடந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளபப்டுகின்றார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் 74 எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இதில் கடந்த மாதம் நான்கு பேர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

# “அனைத்து தமிழ்கட்சிகளும் ஒருதரப்பாக பயணிக்க வேண்டும்”

என்று தெரிவித்துள்ள வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் அரசியலமைப்பு தீர்வு விடயத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரு தரப்பாக பயணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வவுனியாவில், வியாழக்கிழமை(12) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

அவ்வாறான சந்தர்ப்பம் ஏற்படும் போது ஒட்டு மொத்த தமிழ் மக்களின் குரலாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தாத கட்சிகள் ஒன்றாக இணைந்து தமிழ் மக்களின் நிலைப்பாடு இதுதான் என்பதை அரசாங்கத்துடன் நடத்தும் பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கவேண்டும்.இதுதான் கட்சியின் நிலைப்பாடகவும் இருக்கும்.

இது தொடர்பாக எமது கட்சியின் மத்திய குழுவில் ஆராய்ந்து உரிய முடிவை எடுப்போம். தமிழரசுக் கட்சியின் செயலாளர் என்ற வகையில் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பாக ஈபிஆர்எல்எப்,புளொட்,ரெலோ ஆகிய கட்சிகளுடன் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலை ஒன்றாக எதிர்கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தோம்.

அப்போது நாங்கள் அனைவரும் ஒரு கூட்டாக இருக்கிறோம். எனவே, தமிழரசு கட்சி தான் தனித்து உள்ளது. எனவே, நீங்கள் வந்து எமது சின்னத்தில் கேட்கலாம் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் இருந்தனர். அந்தவகையில் திருகோணமலையில் ஒன்றாக போட்டியிட்டமையினாலேயே ஒரு பிரதிநித்துவத்தை தக்கவைக்கக்கூடியதாக இருந்தது. எனவே நாங்கள் முயற்சிகளை எடுத்திருக்கிறோம்.

கடந்த முறை உள்ளூராட்சி தேர்தல் முறைமையினால் அதில் தனித்தனியாக போட்டியிட்டு பின்னர் ஒன்றாகலாம் என்ற ஆலோசனையை முன்வைத்திருந்தோம். ஏனெனில் அந்த தேர்தலில் வட்டார அடிப்படையில் நாம் பெரும்பான்மையாக வெற்றி பெற்றாலும் உள்ளூராட்சி அமைப்புக்களில் ஆட்சியை பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

அதனை தவறுதலாக புரிந்துணர்ந்த ஏனைய கட்சிகள், தேர்தல்களில் தனித்துபோட்டியிட்டிருந்தமை உங்களுக்கு தெரியும். இருப்பினும் அரசியல் அமைப்பு தீர்வு விடயத்தில் நாங்கள் அனைவரும் ஒரு தரப்பாக பயணிக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

தமிழ்த்தேசிய கட்சிகள் இடையே வடக்கு, கிழக்கில் அதிகமான பிரதிநிதித்துவத்தை எமது கட்சி பெற்றுள்ளது. அத்துடன் எமது கட்சி 75வருட வரலாற்று பாரம்பரியம் கொண்ட தாய் கட்சியாகும். எனவே, தமிழ் கட்சிகளை பொதுவான நோக்கத்திற்காக ஒன்றுபட்டு செயற்படுவதற்கான நடவடிக்கையை நாம் எடுப்போம் என்றார்.

# நால்வரின் பெயர்களை அனுப்பியது டெலிபோன்

மனோ கணேசன், சுஜீவ சேனசிங்க, நிசாம் காரியப்பர் மற்றும் முத்து மொஹமட் ஆகியோரின் பெயர்களே தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வருடப் பொதுத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்திக்கு 5 தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் கிடைத்தனர், முன்னதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார நியமிக்கப்பட்டார்.

# பாதுகாப்பு குறைப்பு

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளில் 116 பேர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

38 பொலிஸ் பிரிவுகளுக்கு மாற்றப்பட்ட இந்தக் குழுவில் 7 தலைமை ஆய்வாளர்கள் மற்றும் நான்கு பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் உள்ளனர்.

இந்த குழு ஓய்வுபெற்ற ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு எண். 5 இன் கீழ் நியமிக்கப்பட்டது. ஓய்வுபெற்ற ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு இலக்கம் 5 என்பது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பாகும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு வழங்கிய மூன்று பாதுகாப்பு வாகனங்களும் இதற்கு முன்னர் அகற்றப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவிடம் நாம் வினவிய போது, முன்னாள் ஜனாதிபதிக்கு பாதுகாப்பு வழங்கிய 116 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவை தேவை கருதி நீக்கப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்காக 67 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளனர். ஏனையவர்கள் பின்வருமாறு இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மெய்ப்பாதுகாவலர்களின் எண்ணிக்கை 51 ஆகவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் மெய்ப்பாதுகாவலர்களின் எண்ணிக்கை 58 ஆகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மெய்ப்பாதுகாவலர்களின் எண்ணிக்கையும் எதிர்காலத்தில் குறைக்கப்படும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தந்தை வெட்டிய...

13 வயதான மகனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த மகன் தனது தந்தை மற்றும் நபரொருவருடன் இணைந்து பலா மரம் ஒன்றை வெட்டச் சென்றுள்ளார்.

இந்நிலையில், தந்தையும் நபரும் இணைந்து பலா மரத்தை வெட்டிக்கொண்டிருந்த போது மரத்தின் கிளை ஒன்று மகனின் தலையில் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# 4/21 வழக்கை...

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலாந்த ஜயவர்தன ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்ட கட்டுவா பிட்டிய குண்டுவெடிப்பு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 182 நட்டஈடு வழக்குகள் தொடர்பில் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி நிலந்த ஜயவர்தன ஆகியோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், தமது கட்சிக்காரர்கள் இருவரும் பொலிஸ் உத்தியோகத்தர்களாக இருப்பதால், பொலிஸ் விதிகளின் பிரகாரம் சம்பந்தப்பட்ட சம்பவம் இடம்பெற்று 3 மாதங்களுக்கு முன்னர் அவர்களுக்கு எதிராக எந்தவொரு வழக்கும் தாக்கல் செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

வழக்குரைஞர்கள் முதற்கட்ட ஆட்சேபனையை சமர்ப்பித்ததோடு, குண்டுவெடிப்பு நடந்து மூன்று மாதங்களுக்குள் பாதிக்கப்பட்டவர்கள் உரிய வழக்கை தாக்கல் செய்யாததால், தங்கள் வாடிக்கையாளர்களான காவல்துறை அதிகாரிகள் மீதான இழப்பீட்டு வழக்குகளை ஆரம்பத்திலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறினார்.

இந்த பூர்வாங்க ஆட்சேபனையை முன் விசாரணையில் பூர்வாங்க சட்ட சிக்கலாக பரிசீலித்து தீர்க்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## முகவரின் கழுத்தை அறுத்த நபர்

வெளிநாட்டுக்கு பணிப்பெண்ணாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள தனது கள்ளக்காதலியுடன் தொடர்பினை ஏற்படுத்திதருமாறு கோரிய நபர், அக்கோரிக்கை நிறைவேறாமையால், வெளிநாட்டு முகவரின் (வயது 52) கழுத்தை அறுத்ததுடன், அங்கிருந்த பெண் ஊழியரையும் காயப்படுத்திவிட்டு, தன்னுயிரையும் மாய்க்கவும் முயன்றுள்ளார்.

இந்த சம்பவம், நாவின்ன பிரதேசத்தில், வியாழக்கிழமை (12) இடம்பெற்றுள்ளது.

குருநாகல், அஸ்வெத்தும பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் நாவின்ன பிரதேசத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் ஊடாக தன்னுடைய கள்ளக்காதலியை குவைட்டுக்கு பணிப்பெண்ணாக அனுப்பிவைத்துள்ளார்.

அந்த நிலையத்துக்கு சென்ற 32 வயதான நபர், தனது கள்ளக் காதலியுடன் தொலைபேசியில் தொடர்பை ஏற்படுத்தி தருமாறு கோரியுள்ளார். எனினும், அது வியாழக்கிழமையும் (12) நிறைவேறாமையால், முகவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, முகவரின் கழுதை அறுத்துவிட்டு, அங்கிருந்த பெண் ஊழியரையும் தாக்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்தவுடன் விரைந்த குருநாகல் பொலிஸார், சந்தேகநபரை கத்தியுடன் கைது செய்துள்ளனர். காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மனநலம் பாதித்த சிறுமியை விற்ற தந்தைக்கு சிறை

மனநல கோளாறுகள் கொண்ட சிறுமியை பலவந்தமாக தடுத்து வைத்து, விபசாரத்தில் ஈடுபடுத்தினார் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான சந்தேக நபரை குற்றவாளியாக இனங்கண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிமன்ற நவரத்ன மாரசிங்க, 30 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து, வியாழக்கிழமை (12) தீர்ப்பளித்தார்.

ஒரு பிள்ளையின் தந்தையான 37 வயதான நபருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தன்னுடைய தாய், சகோதரி மற்றும் மனைவிக்கு மரியாதை கொடுப்பது போல் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளையும் சமுதாயத்தில் உள்ளவர்கள் மதிக்க வேண்டும் என்று வலியுறுத்திய நீதிபதி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு தண்டனை வழங்கும் போது, இதுபோன்ற தவறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு நீதிமன்றத்தில் மன்னிப்பு இல்லை என்றும் நீதிபதி குறிப்பிட்டார்.

ஒரு குற்றச்சாட்டுக்கு 10 வருடங்கள் என்ற அடிப்படையில் மூன்று குற்றச்சாட்டுகளுக்கு 30 வருடங்கள் கடூழிய சிறை தண்டனை விதித்த நீதிபதி, பாதிக்கப்பட்ட அந்த சிறுமிக்கு நான்கரை லட்சம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு உத்தரவிட்டார். அத்துடன், 45 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.



## நீதி கோரி பேரணி...

மஹர சிறைச்சாலையில் கொல்லப்பட்ட கைதிகளுக்கு நீதி கோரி, கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினர் கொழும்பு புறக்கோட்டையில் இருந்து ஜனாதிபதி செயலகத்தை நோக்கி, புதன்கிழமை (11) பேரணி முன்னெடுத்தனர்.


























தமிழக மீனவர்கள் 9 பேர்

# நிபந்தனையுடன் விடுதலை

தமிழக மீனவர்கள் 9 பேரை நிபந்தனையுடன் விடுதலை செய்தும், விசைப்படகு ஓட்டுநருக்கு ஒரு வருடம் சிறை தண்டனை விதித்தும், உயிரிழந்த கடற்படை வீரருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் இலங்கையின் மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜுன் 25-ம் திகதி இலங்கை கடற்படையினர் நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த ஆனந்தன் என்பவருக்குச் சொந்தமான விசைப் படகை கைப்பற்றி, படகிலிருந்த முத்துசெட்டி (70), அவரது மகன்கள் மதி (38), ராஜேஷ் (35) மற்றும் வைத்தியநாதன் (45), வானவன்மாதேவியைச் சேர்ந்த கலைமுருகன் (25), கீச்சாங்குப்பத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி (60), கடலூரைச் சேர்ந்த மணி பாலன் (55), ஆந்திராவைச் சேர்ந்த கங்கால கொருமையா மற்றும் 2 மீனவர்கள் என மொத்தம் 10 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.


இந்த கைது நடவடிக்கையின் போது, இலங்கை ரோந்துப் படகிலிருந்த இலங்கை கடற்படை வீரர் ரத்நாயக்க, கைப்பற்றப்பட்ட மீனவர்களின் படகிலிருந்து தவறி விழுந்து, மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு செல்லும் போது உயிரிழந்தார். இலங்கை கடற்படை வீரர் உயிரிழந்தது தொடர்பாக கங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.



இந்நிலையில், மீனவர்களின் தடுப்புக்காலம் புதன்கிழமை(11) முடிவடைந்ததை தொடர்ந்து மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, பத்து மீனவர்களில் 9 மீனவர்களை மீண்டும் இலங்கை கடற்பரப்பில் மீன் பிடித்தால் சிறை தண்டனை விதிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் விடுதலை செய்தும், விசைப்படகின் ஓட்டுநருக்கு ஒரு வருடம் சிறை தண்டனை விதித்தும், உயிரிழந்த கடற்படை வீரருக்கு இழப்பீடாக இலங்கை ரூ.35 லட்சம் (இந்திய மதிப்பில் ரூ.10 லட்சம்) வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

## மு.பொ. நினைவுப்பகிர்வு



மூத்த எழுத்தாளர், கவிஞர் அமரர் மு. பொன்னம்பலம் (மு.பொ) நினைவுப்பகிர்வு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (13) மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நினைவுப்பகிர்வில் முனைவர் செல்வி திருச்சந்திரன் ,பேராசிரியர் சி.மௌனகுரு ,பேராசிரியர் வ. மகேஸ்வரன், உரை பெயர்ப்பாளர் எஸ். சிவகுருநாதன் ,சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் ,மெய்யியல் ஆசான் தா. இராஜரட்னம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்



## ஐயப்பன் தேவஸ்தான பூஜைகள்

கோண்டாவிலில் அமைந்துள்ள ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் இலட்சநாம அர்ச்சனை இலட்ச கோமத்தினை பிரதம சிவாச்சாரியார் ஹரிஹரசுதன் சிவாச்சாரியார் தலைமையில் பூஜைகள் இடம்பெற்றுள்ளது.

# கேரளா கஞ்சாவுடன் இருவர் கைது

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - காரைநகர் கசூரினா கடற்கரைக்குஅண்மித்த பகுதியில், எரிபொருள் முடிவடைந்த நிலையில் படகொன்று வியாழக்கிழமை (12) காலை கரை ஒதுங்கியுள்ளது.

படகு சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்பட்டமையால் அதை புலனாய்வாளர்கள் சோதனையிட்ட போது ,92 பொதிகளில் இருந்து 213, 899 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து , படகில் வந்த இருவரும் கைது செய்யப்பட்டு , கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகள் மேலதிக நடவடிக்கைகளுக்கு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.




### நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட்
### PV 00255136

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 242 (3) (ஆ) வின்கீழான பகிரங்க அறிவித்தல்.**

நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட் (PV 00281338), நிலையான வருமான முதலீடு ஐஏ (பிறைவேட்) லிமிடெட் (PV 00288307), நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட் (PV 00255136), நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட் (PV 00309628), நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் (PV 00309267) மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் (PV 00315729) என்பவற்றை நிலையான வருமான முதலீடு II (பிறைவேட்) லிமிடெட்டுடன் (PV 00275480) ஒன்றுசேஉத்தல்

(இதனகத்துப்பின்னர் "ஒன்றுசேஉகின்ற உருவகங்களான") நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு IV (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் அத்துடன் நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட் என்பவற்றின் பணிப்பாளர் சபை, சட்டத்தின் 242 ஆம் பிரிவின் நியதிகளின்படி, ஒன்றுசேர்கின்ற உருவகங்களை நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட்டினுள் ஒன்றுசேர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ("சட்டம்") பிரிவு 242 (3) (ஆ)வின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

உத்தேசிக்கப்பட்ட ஒன்றுசேர்க்கை 2025 சனவரி 14 ஆந்திகதியன்று அல்லது கம்பெனிகள் பதிவாளரினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று பயனுறுதல் வேண்டும்.

சபையின் கட்டளைப்படி
கம்பெனிச் செயலாளர்
நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட்

### நிலையான வருமான முதலீடு IV (பிறைவேட்) லிமிடெட்
### PV 00288307

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 242 (3) (ஆ) வின்கீழான பகிரங்க அறிவித்தல்.**

நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட் (PV 00281338), நிலையான வருமான முதலீடு ஐஏ (பிறைவேட்) லிமிடெட் (PV 00288307), நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட் (PV 00255136), நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட் (PV 00309628), நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் (PV 00309267) மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் (PV 00315729) என்பவற்றை நிலையான வருமான முதலீடு II (பிறைவேட்) லிமிடெட்டுடன் (PV 00275480) ஒன்றுசேஉத்தல்

(இதனகத்துப்பின்னர் "ஒன்றுசேஉகின்ற உருவகங்களான") நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு IV (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் அத்துடன் நிலையான வருமான முதலீடு IV (பிறைவேட்) லிமிடெட் என்பவற்றின் பணிப்பாளர் சபை, சட்டத்தின் 242 ஆம் பிரிவின் நியதிகளின்படி, ஒன்றுசேர்கின்ற உருவகங்களை நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட்டினுள் ஒன்றுசேர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ("சட்டம்") பிரிவு 242 (3) (ஆ)வின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

உத்தேசிக்கப்பட்ட ஒன்றுசேர்க்கை 2025 சனவரி 14 ஆந்திகதியன்று அல்லது கம்பெனிகள் பதிவாளரினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று பயனுறுதல் வேண்டும்.

சபையின் கட்டளைப்படி
கம்பெனிச் செயலாளர்
நிலையான வருமான முதலீடு IV (பிறைவேட்) லிமிடெட்

### நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட்
### PV 00281338

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 242 (3) (ஆ) வின்கீழான பகிரங்க அறிவித்தல்.**

நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட் (PV 00281338), நிலையான வருமான முதலீடு ஐஏ (பிறைவேட்) லிமிடெட் (PV 00288307), நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட் (PV 00255136), நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட் (PV 00309628), நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் (PV 00309267) மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் (PV 00315729) என்பவற்றை நிலையான வருமான முதலீடு II (பிறைவேட்) லிமிடெட்டுடன் (PV 00275480) ஒன்றுசேஉத்தல்

(இதனகத்துப்பின்னர் "ஒன்றுசேஉகின்ற உருவகங்களான") நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு IV (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் அத்துடன் நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட் என்பவற்றின் பணிப்பாளர் சபை, சட்டத்தின் 242 ஆம் பிரிவின் நியதிகளின்படி, ஒன்றுசேர்கின்ற உருவகங்களை நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட்டினுள் ஒன்றுசேர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ("சட்டம்") பிரிவு 242 (3) (ஆ)வின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

உத்தேசிக்கப்பட்ட ஒன்றுசேர்க்கை 2025 சனவரி 14 ஆந்திகதியன்று அல்லது கம்பெனிகள் பதிவாளரினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று பயனுறுதல் வேண்டும்.

சபையின் கட்டளைப்படி
கம்பெனிச் செயலாளர்
நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட்

### நிலையான வருமான முதலீடு II (பிறைவேட்) லிமிடெட்
### PV 00275480

**கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 242 (3) (ஆ) வின்கீழான பகிரங்க அறிவித்தல்.**

நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட் (PV 00281338), நிலையான வருமான முதலீடு ஐஏ (பிறைவேட்) லிமிடெட் (PV 00288307), நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட் (PV 00255136), நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட் (PV 00309628), நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் (PV 00309267) மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் (PV 00315729) என்பவற்றை நிலையான வருமான முதலீடு II (பிறைவேட்) லிமிடெட்டுடன் (PV 00275480) ஒன்றுசேஉத்தல்

(இதனகத்துப்பின்னர் "ஒன்றுசேஉகின்ற உருவகங்களான") நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு IV (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் அத்துடன் நிலையான வருமான முதலீடு II (பிறைவேட்) லிமிடெட் என்பவற்றின் பணிப்பாளர் சபை, சட்டத்தின் 242 ஆம் பிரிவின் நியதிகளின்படி, ஒன்றுசேர்கின்ற உருவகங்களை நிலையான வருமான முதலீடு II (பிறைவேட்) லிமிடெட்டினுள் ஒன்றுசேர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ("சட்டம்") பிரிவு 242 (3) (ஆ)வின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

உத்தேசிக்கப்பட்ட ஒன்றுசேர்க்கை 2025 சனவரி 14 ஆந்திகதியன்று அல்லது கம்பெனிகள் பதிவாளரினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று பயனுறுதல் வேண்டும்.

சபையின் கட்டளைப்படி
கம்பெனிச் செயலாளர்
நிலையான வருமான முதலீடு II (பிறைவேட்) லிமிடெட்

# எலிக்காய்ச்சலில் இருந்து பாதுகாத்துக் கொள்வது அவசியம்

கடும் மழையும் அதன்பின்னர் பெருவெள்ளம் ஏற்பட்ட பின்னர் பல்வேறு தொற்று நோய்கள் பரவும், அதில், பெரும்பாலானவை காய்ச்சலாக இருக்கும். இந்நிலையில், யாழ். மாவட்டத்தில் மர்ம நோயால், வியாழக்கிழமை (12) வரையிலும், ஐவர் மரணமடைந்துள்ளனர். அந்த மர்ம நோய், எலிக்காய்ச்சல் என்றே கூறப்படுகிறது. எனினும், அதனை கண்டறிவதற்கான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நோயாளிகள் காய்ச்சல் மற்றும் சுவாசக் கோளாறுகளுடன் உள்ளனர். நோய்க்கான சரியான காரணத்தை உறுதிப்படுத்த சுகாதார அதிகாரிகள் குறித்த நபர்களிடமிருந்து மாதிரிகளை சேகரித்து வருவதாக தொற்றா நோய் பிரிவின் மருத்துவர் குமுது வீரகோன், கொழும்பில், புதன்கிழமை (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்திருந்தார்.

பொதுவாக‘எலிக்காய்ச்சல்’எனப்படும் லெப்டோஸ்பிரோசிஸ் நோயுடன் இது தொடர்புடையதா என்பதை கண்டறிவதற்கான பரிசோதனைகளே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அது தற்போதைய மர்ம காய்ச்சல் ஆராய்வதற்கான பரிசோதனைகளாகும். எனினும், அந்த நோயால் இன்னும் பாதிக்கப்படுபவர்கள் இருக்கக்கூடும். ஆகையால், சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது அவசியமாகும்.

இலங்கையில் லெப்டோஸ்பிரோசிஸ் தொடர்ந்தும் ஒரு முக்கிய சுகாதார பிரச்சினையாக உள்ளது. கடந்த 2023ல், நாட்டில் 9ஆயிரத்துக்கும் மேற்பட்ட எலிக்காய்ச்சல் வழக்குகள் பதிவாகியுள்ளன, இதன் விளைவாக கிட்டத்தட்ட 200 பேர் உயிரிழந்தும் உள்ளனர்.

இந்த ஆண்டு பதிவாகிய எண்ணிக்கை, கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் பதிவானதை விட அதிகரித்துள்ளதாகவும் மருத்துவர் குமுது வீரகோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுவாக பெரு வெள்ளத்தினால் ஏற்படும் அசுத்தமான நீர் நிறைந்திருக்கும் பிரதேசங்களிலும் வயல்களிலும் எலிக்காய்ச்சல், பரவுவதுண்டு. எலிக் காய்ச்சல் நோயால் பெரும்பாலும் விவசாய பெருமக்களே பாதிக்கப்படுகின்றார்கள். மழை ஓய்ந்து வெள்ள நீர் வடிந்து கொண்டிருக்கும் காலத்தில் வயல்களில் உள்ள இளம் நெற் கதிர்களை உண்பதற்கு போட்டி போட்டுக்கொண்டு நெல் வயல்களை ஆக்கிரமிக்கும் எலிகளின் சிறுநீர் மூலமே இந்த நோய் பரவுவது கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் வயல் காணிகளிலும் சதுப்பு நிலங்களிலும் இரத்தினக்கல், காரீய சுரங்கங்களில் பணிபுரிவோருக்கு, கழிவு நீர் வடிந்து செல்லும் வாய்க்கால்கள் ஆகியவற்றைச் சுத்தமாக்குபவர்களுக்கும் எலிக் காய்ச்சல் நோய் இலகுவில் தொற்றுகின்றது. இவற்றைவிட அசுத்தமான நீர்த்தேக்கங்களில் விளையாடுபவர்கள், நீந்துபவர்களை இந்நோய் இலகுவில் தாக்குகிறது.

காலணிகள் அணியாமல்,பாதுகாப்பு இன்றி இத்தகைய நீர் நிலைகளில் இறங்குபவர்கள் நிச்சயம் இந்நோயினால் பாதிக்கப்படுவதாக வைத்தியர்கள் கூறுகிறார்கள். கால்களில் காயங்கள் அல்லது உபாதைகள் உள்ளவர்கள் இலகுவாக இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

என்னுடைய வீட்டு சுற்றுப் புறத்தை மாத்திரம் நான் சுத்தமாக வைத்திருந்தால் எனக்கு ஆபத்து இல்லை என்ற எண்ணத்துடன் வீட்டுக்கு அயலில் உள்ள பிரதேசங்களில் குப்பை கூளங்களை வீசிவிடும் எமது மக்களின் சுயநலப் போக்கே இந்த நோய் பரவுவதற்கான இன்னும் ஒரு காரணமாகும். மனித குலத்துக்கு பல்வேறு வகையிலும் தீங்கிழைக்கும் எலிக்காய்ச்சலில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான முன்னேற்பாடுகளை செய்வது அவசியம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தங்களது மனத்தை வதைக்க, அவர்களுக்கே உரிமையில்லை. உயிருடன் வாழும் வரை, மனமும் மனிதனுடன் ஒட்டியபடியே இருக்கும். எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேக சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப்பொழுதுக்குள், மனம் புதியபுதிய எண்ணங்களை உருவாக்குகின்றது. எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேக சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப்பொழுதுக்குள், மனம் புதியபுதிய எண்ணங்களை உருவாக்குகின்றது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்



தெ. ஞாலசீர்த்திமீநிலங்கோ

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 30

# அபிவிருத்தியின் இராணுவமயமாக்கல்

மோதலுக்குப் பிந்தைய இலங்கையின் கள-யதார்த்தம் என்பது, உலகளாவிய அனுபவங்களில் இருந்து வேறுபட்டதாக இருந்தது.

பெரும்பாலும் மோதலுக்குப் பிந்தைய நாடுகளில், கிழக்கு திமோர், நேபாளம், வடக்கு அயர்லாந்து, குவாத்தமாலா மற்றும் எல் சால்வடார் போன்ற ஆயுத மோதல்களில் ஈடுபட்ட இராணுவத்திலிருந்து தங்களைத் தூர விலக்கிக் கொள்ளும் சிவில் அரசாங்கங்களால் புனரமைப்பு செயல்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குவாத்தமாலாவில், பாரிய குற்றங்களுக்கு இராணுவம் மிகவும் பொறுப்பாக இருந்ததால், சமாதான முன்னெடுப்புகளின் முக்கிய அம்சம் ஒன்று இராணுவத்தை புனரமைப்பு செயல்முறைகளில் இருந்து விலக்கியது. வடக்கு அயர்லாந்தில், 1995 இல் புனித வெள்ளி ஒப்பந்தத்திற்குப் பிறகு, பிரிட்டிஷ் இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டன. இலங்கையில் இவ்வாறு நிகழவில்லை.

மேற்சொன்ன நாடுகளில் நடைபெற்றது போலன்றி இலங்கையில் ஒரு தரப்பின் முழுமையான அழிவின் வழி, இன்னொரு தரப்பு முழுமையான இராணுவ வெற்றி பெற்றது. மோதலின் முடிவு இலங்கை அரசின் முழுமையாக வெற்றியாகும்.மோதலுக்குப் பிந்தைய எந்தவொரு செயன்முறையையும் தனது விருப்பப்படி செய்வதற்கான வாய்ப்பு இலங்கை அரசுக்கிருந்தது.

இலங்கை அனுபவம் யாதெனில், போருக்குப் பிந்தைய மறுசீரமைப்பு செயல்முறையானது போரின் நோக்கங்களை செயல்படுத்துவதன் தொடர்ச்சியாகும்.

அதேவேளை அது புவிசார் அரசியல் மூலோபாய ஒருங்கிணைப்பும் அதன் இன்றியமையாத அங்கமான ஒற்றையாட்சி அரசைத் தக்கவைப்பதாகும்.

ஒற்றையாட்சி மற்றும் அதன் புவிசார் மூலோபாய செயலாற்றுகைக்கு அச்சுறுத்தலாகக் கருதப்பட்ட தமிழ் தேசியவாதத்தின் பல்வேறு சமூக அரசியல் பரிமாணங்களைக் குறிவைக்கும் பல அணுகுமுறைகளை போருக்குப் பிந்தைய அரசின் செயற்பாடுகள் கொண்டிருந்தன.

இலங்கை அரசு, மேற்கத்திய நன்கொடை நாடுகள் மற்றும் சிங்கள சிவில் சமூகம் ஆகியவற்றால் ஊக்குவிக்கப்பட்ட போருக்குப் பிந்தைய காலத்தில் நல்லிணக்கம் பற்றிய உரையாடல் மிகவும் மேலாதிக்கம் செலுத்தியது. உண்மையில், போர் இந்த நோக்கத்துடன் நடத்தப்படவில்லை. பிரதான சர்வதேச செயற்பாட்டாளர்கள் ஒற்றையாட்சி அரசை மீளப் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பெரிதும் ஆதரவளித்தனர், ஆனால் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கத்தின் ஒரு பகுதியாக தமிழர்களுடன் தீவின் இறையாண்மையை பகிர்ந்து கொள்ளவில்லை.

எனவே, இலங்கை அரசு தனது நடவடிக்கையை மாற்றுவதற்கு தார்மீக, அரசியல் அல்லது சட்டரீதியான அழுத்தம் அல்லது கடப்பாடு எதுவும் இல்லை. இந்த அடிப்படைகளைப் புரிந்து கொண்டாலே போருக்குப் பிந்தையஅபிவிருத்தியில் எவ்வாறு இராணுவம் முக்கிய பங்காற்றியது என்பதை விளங்கிக் கொள்ளவியலும்.

போருக்குப் பிந்தைய வளர்ச்சி-பாதுகாப்பு இணைப்பில் இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளன.

முதலாவது அம்சம் இரண்டு வகைப்பட்டதாக இருந்தது. பெரிய அளவிலான இராணுவமயமாக்கல், நிலம் மற்றும் வணிக மற்றும் பொருளாதார மதிப்பின் முக்கிய மையங்களைக் கையகப்படுத்துதல், சிவில் நிர்வாகத்தின் கட்டுப்பாடு, இராணுவத்தின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு ஆகியவற்றின் மூலம் வடக்கு மற்றும் கிழக்கின் சமூகப் பொருளாதார வாழ்க்கையில் இராணுவத் தலையீடு மூலம் கட்டமைப்பு மாற்றங்கள் ஆகியன ஒருபுறமாக நடந்தன.

மறுபுறம், இராணுவ மூலோபாய உள்கட்டமைப்பை கட்டியெழுப்புதல், பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகளில் இராணுவ ஈடுபாடு, சிங்கள குடியேற்றங்களை நிறுவுதல் மற்றும் சிங்களம் புத்தமயமாக்கல் ஆகியன நடந்தன.

இரண்டாவது அம்சம், ஒற்றையாட்சி அரசின் கீழ் வெகுஜன அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெறுமாறு கோரப்பட்ட மோதலின் அரசியல் மறுசீரமைப்பைச் திசைமாற்றுதல்.

குற்றவியல் நீதியானது, நாட்டில் உள்ள ஒரு தனித்துவமான மக்கள் குழுவிற்கு எதிரான முறையான மற்றும் ஒருங்கிணைந்த கட்டமைப்புத் தாக்குதலைக் காட்டிலும், பாரிய அட்டூழியங்களை தனிப்பட்ட மனித உரிமை மீறல்கள் அல்லது பிறழ்வுகள் என்று சித்தரிப்பதன் மூலம் அரசியல் நீதியை இழக்கிறது.

மோதலின் முக்கிய அரசியல் காரணம் - ஒற்றையாட்சி அரசு - கேள்விக்கு உள்ளாக்கப்படவில்லை. புனரமைப்பு என்பது ஒரு வளர்ச்சி செயல்முறையாக மட்டுமல்ல, சமூக அரசியல் செயல்முறையாகவும் வரையறுக்கப்படுகிறது, இதன் மூலம் மனித உரிமைகள் என்ற உரையாடல், அரசியல் உள்ளடக்கம் இல்லாமல் குற்றவியல் நீதியாகக் குறைப்பதன் மூலம் தற்போதுள்ள அரச கட்டமைப்பின் கீழ் குறுகியதாக வரையறுக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் கூற்றுப்படி, அத்தகைய குற்றவியல் நீதி செயல்முறை கூட ஒரு சுதந்திரமான சர்வதேச அமைப்பால் அல்ல, ஆனால் இலங்கை அரசின் கீழ் வரும் உள்ளூர் நீதிபதிகளால் வழிநடத்தப்படவேண்டும்.

இது குறித்து பிபிசிக்கு வழங்கிய நேர்காணலில், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, “இந்த விசாரணையானது உள்நாட்டிலும் உள்நாட்டிலும், நாட்டின் சட்டங்களை மீறாமல் இருக்க வேண்டும், மேலும் இது தொடர்பான நீதித்துறை மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகளை நான் நம்புகிறேன்.

சர்வதேச சமூகம் அரசின் நலன்கள் குறித்து கவலைப்படத் தேவையில்லை” என்றார். அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறையை அங்கீகரித்து, இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க அரச திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர், “உங்கள் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கும், உங்கள் மக்களை நல்லிணக்கப்படுத்துவதற்கும் நீங்கள் பெற்ற வெற்றியானது, உலகெங்கிலும் ஒரு முன்மாதிரியாக இருக்கும். இந்த முயற்சியில் ஒரு பங்காளியாக இருப்பதில் அமெரிக்கா பெருமிதம் கொள்கிறது மற்றும் இலங்கையின் நட்பு நாடாக இருப்பதில் பெருமை கொள்கிறது”

என்று கருத்துரைத்தார். இந்தியா முதல் அமெரிக்கா வரையிலான உலகளாவிய அரங்காடிகள், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா.வின் நிறுவனங்கள், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், அமெரிக்க உதவி நிறுவகம் - யுஎஸ்எயிட் போன்ற அரசுகளுக்கிடையேயான நன்கொடை நிறுவனங்களால் வெவ்வேறு காரணங்களுக்காக ஒற்றையாட்சி அமைப்பு பெரிதும் ஆதரிக்கப்பட்டது.

யாழில் வடக்கு குடாநாட்டில் ஒரு தமிழ் குடும்பத்திற்கு ஒரு சிப்பாய் என்ற வகையில் இராணுவ அடர்த்தி ஒன்று முதல் ஐந்து வரை இருந்தது. இந்த விகிதம் செச்சினியா, காஷ்மீர் மற்றும் பாக்தாத்தில் (அமெரிக்க படையெடுப்பிற்குப் பிறகு) இராணுவ-சிவிலியன் விகிதத்தை விட அதிகம்.

2012 ஆம் ஆண்டளவில் இலங்கை இராணுவத்தின் பத்தொன்பது பிரிவுகளில் பதினான்கு படைகள் வடக்கில் நிலைகொண்டிருந்தன. 2015 இல் போருக்குப் பின்னரான ஆட்சி மாற்றத்தின் பின்னரும் இந்த எண்ணிக்கையில் பாரிய மாற்றங்கள் நிகழவில்லை. 2015இல் ஆட்சிக்கு வந்த “நல்லாட்சி அரசாங்கம்”, பிராந்தியத்தில் இராணுவ பிரசன்னத்தை குறைக்கப் போவதில்லை என்று திட்டவட்டமாக கூறியது.

வடக்கு, கிழக்கின் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள மணலாறு முகாமை இராணுவத் தலைமையகங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தியதானது, தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசத்தின் தொடர்ச்சியைச் சிதைக்கும் முயற்சியாகும். யாழ் மாவட்டத்தில் மாத்திரம் 117 சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான இராணுவ முகாம்கள் பற்றிய தகவல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

இது பலாலியில் மிகப்பெரிய உயர் பாதுகாப்பு வலயத்தையும் கொண்டுள்ளது. யாழ் மாவட்டச் செயலகத்தின் தகவலின்படி, மாவட்டத்தில் இராணுவ மயமாக்கல் காரணமாக 8,500 காணி உரிமையாளர் குடும்பங்கள் வேரோடு அகற்றப்பட்டுள்ளன. வட கிழக்கில் குறைந்தது 150,000 பாதுகாப்பு படை வீரர்கள் உள்ளனர்.

போரின் இறுதி ஆண்டுகளில் பாதுகாப்புக்கான நிதி, வரவு செலவுத் திட்டத்தில் 40 வீத அதிகரிக்கபட்டது. போருக்குப் பிந்தைய காலப்பகுதியல் யுத்தம் உத்தியோகபூர்வமாக முடிவடைந்து பதினைந்து வருடங்கள் கடந்துள்ள போதிலும் பாதுகாப்பு நிதி குறைக்கப்படவில்லை. இராணுவம் பிராந்தியத்தில் உள்ள பெரும்பாலான மூலோபாய இடங்களை ஆக்கிரமித்துள்ளது. குறிப்பாக கடற்கரையோரங்களில் சில முக்கிய மீன்பிடி கிராமங்கள் மற்றும் துறைமுகங்களை கையகப்படுத்தியிருந்தது. இதனால் அப்பகுதி மக்களுக்கு அப்பகுதிகளுக்கான அணுகலுக்கு தடை விதிக்கப்பட்டது.

இது அவர்களின் வாழ்வாதாரத்தை மீன்பிடி வெகுவாகப் பாதித்தது. இராணுவ மூலோபாயம், இலங்கை அரசுடனான அமெரிக்க அரசாங்கத்தின் அதிகரித்து வரும் இராணுவ உறவுகளுடன் தெளிவாக ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளது. ஜூலை 2016 இல், அப்போதைய தெற்காசியாவுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால், இலங்கைக்கான தனது விஜயத்தின் போது, இலங்கைத் தீவுடன் கடல்சார் இராணுவ-இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

2016 ஆம் ஆண்டு இலங்கை ஒரு பெரிய கடல்சார் பாதுகாப்பு மாநாட்டை நடத்தியது.

இதில் கலந்து கொண்ட அமெரிக்க பசிபிக் கட்டளைத் தளபதி “ஒரு காலத்தில் உடல் மற்றும் உளவியல் தடைகளாக இருந்த பெருங்கடல்கள் இப்போது நம்மைக் நெருக்கமாக இணைக்கும் கடல்சார் அதிவேக நெடுஞ்சாலைகள்” என்றார்.

இலங்கை கடற்படையினருக்கு பயிற்சியளிக்கும் பணியில் அமெரிக்க கடற்படையினர் ஈபட்டுள்ள திருகோணமலை மூலோபாய துறைமுகத்தையும் அவர் பார்வையிட்டார். இவ்வகையில், தமிழர்களை இராணுவமயமாக்குவது போருக்குப் பின்னரான புனரமைப்புச் செயற்பாட்டின் இன்றியமையாத அங்கமாக மாறியது. போருக்குப் பின்னரும் தமிழ் மக்கள் இராணுவமயமாக்கப்பட்டதன் பின்னணியில் இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகத்திற்கு இடையில் கூட்டு உணர்வு இருந்தது என்பதை விளங்கிக் கொள்வது சிரமமல்ல.

## கடிதங்கள்

### இடம் ஆக்கிரமிப்பால் வெள்ளம்

புத்தளம் மாவட்டம் மழை மாவட்டமானது வெள்ளத்தில் மூழ்கி விடுகின்றது. இதற்குக் காரணம் மாவட்டத்திலுள்ள குளங்கள்,ஆறுகள் மற்றும் பள்ளங்கள் நிறைந்த இடங்களை இட ஆக்கிரமிப்பினால் மணலால் நிரப்பி வீடுகள் அமைத்து இடத்தினை சுவிகரித்துக் கொண்ட காரணத்தினால் நீரானது வழிந்தோடுவதற்கு எவ்வித இடமுமின்றி தேங்கி வெள்ளமாகின்றது.

அதேபோல மழைக்காலங்களில் கால்வாய்கள் நிறைந்து காணப்படுவதனால், அக் கால்வாயிலிருந்து கழிவு நீரானது நேரடியாக தாழ்மையான பிரதேசங்களுக்கு வழிந்து ஓடுவதனால் அப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கும் அது சிரமமாக உள்ளது. மழை நீரும் கால்வாய்களில் இருந்த நீரும் நிரம்புவதனால் வெள்ளம் ஏற்படுகின்றது. எப்போதெல்லாம் மழை பெய்கின்றதோ அப்போதெல்லாம் புத்தளம் மாவட்டத்தில் வெள்ளம் ஏற்படுவதும் சாதாரணமாகிவிட்டது. மேலும் கால்வாய்கள் ஒழுங்காக வெட்டப்படாமலும் அவற்றிலுள்ள குப்பைகளை அகற்ற முடியாமல் இருப்பதும் அங்கு பிரதான பிரச்சினையாகின்றது.

எனவே இடசுவீகரிப்பு காரணத்தினால் மழைக்காலங்களில் வெள்ளமானது வலிந்து ஓடுவதற்கு வழியின்றி வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இக்காலங்களில் தாழ்மையான பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட மக்கள் வேறு பாடசாலை மற்றும் கோயில்களில் தங்க வைக்கப்படுகின்றனர்.

எனவே இப்பிரச்சனையை உரிய தீர்வு பெற்று தருமாறு மக்கள் கோரிக்கையை விடுகின்றனர்.

6) சொக்கலிங்கம் லோகினி

# “பாதுகாப்பான பயணம்”



ஏ.எச்.ஏ. ஹுஸைன்



நமது நாட்டில் ஒவ்வொரு மூன்று மணித்தியாலத்திற்கும் ஒருவர் என்ற அடிப்படையில் கவனக் குறைவான வாகனம் செலுத்தும் விபத்துக்களில் சிக்கி தமது உயிரைப்போக்கிக் கொள்கின்றார்கள் என்ற திடுக்கிடும் தகவல் வீதிகளில் பயணிக்கும் நம்மில் எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கிறது என்பதில் தெளிவில்லை. அந்த அடிப்படையில் பார்த்தால் நாளொன்றிற்கு 8 பேரும், ஒரு மாதத்தில் சுமார் 240 பேரும், ஒரு வருடத்தில் அண்ணளவாக 2880 பேரும் உயிரிழக்கின்றனர். கடந்த பத்து வருட காலப்பகுதிக்குள் கவனக் குறைவாக வாகனம் செலுத்தும் வீதி விபத்துக்களினால் சுமார் 30 ஆயிரம் பேர் காவு கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

வீதி விபத்துக்கள் சாதி சமயம் பார்த்தோ மொழி பிரதேசம் அல்லது பால் வயது வித்தியாசங்களின் அடிப்படையிலோ நிகழ்வதில்லை.

இது பயங்கரவாதத்தை விட கொடியது என்றுதான் கொள்ளப்பட வேண்டும். காரணம் சிலவேளை, நாம் பயங்கரவாதத்தின் இலக்குகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முடிந்;தாலும்கூட இத்தகைய முன்னெச்சரிக்கை தராத கொடிய வீதி விபத்துக்களிலிருந்து தப்பிக்கவே முடியாது போய்விடும்.

எனவே, இத்தகைய பேராபத்துக்களில் இருந்து நாட்டு மக்களை மீட்டெடுப்பதற்கான ஒரு விழிப்புணர்வுத் திட்டத்தை தாங்கள் ஆரம்பித்திருப்பதாக அக்ஷன் யுனிற்றி லங்கா எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் தெரிவிக்கின்றது.

சைல்ட் பண்ட் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனம் “கவனத்துடனும் அக்கறையுடனும் போக்குவரத்து விதிகளைப் பிற்பற்றி பாதுகாப்புடன் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தல் விழிப்புணர்வு” எனும் தொனிப்பொருளில் அமைந்த ஒன்லைன் நிகழ்நிலை ஊடான கருத்தாடல் நிகழ்வைத் துவக்கியுள்ளது.

இதன்மூலம் “இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்கள் பாதுகாப்பாக வாகனம் ஒட்டுவதன் மூலம் வாழ்வதற்கான உரிமைகளை உறுதி செய்தல்;” எனும் ஒன்லைன் நிகழ்நிலை விழிப்புணர்வுப் பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகிறது.

ஆரம்பமாக மட்டக்களப்பில் நிகழ்வைத் துவக்கி வைத்து அங்கு கருத்துத் தெரிவித்த அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனத்தின் இளைஞர் அபிவிருத்தி வலுவூட்டல் செயற்திட்ட இணைப்பாளர் அனுலா அன்ரன், இலங்கையில், வருடாந்தம் சராசரியாக 38,000 விபத்துக்கள் நிகழ்கின்றன, அதன் விளைவாக வருடாந்தம் சுமார் 3,000 இறப்புகள் மற்றும் 8,000 கடுமையான காயங்கள் ஏற்படுவதாகக் கண்டறிப்பட்டுள்ளது.

கடந்த தசாப்தத்தில் இலங்கையின் வீதிகளில் ஏற்படும் அதிக வீதி விபத்து மரணங்கள் மற்றும் காயங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் பாதித்திருக்கின்றது.

சாலை விபத்தில் சிக்கி பலியானவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் 15-30 வயதுக்குட்பட்டவர்கள். அதனாலேயே இளைஞர்கள் மத்தியில் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்த விளைகின்றோம். முதற் கட்டமாக குறைந்த பட்சம் 50 ஆயிரம் பேரை இந்த விழிப்புணர்வப் பிரச்சாரம் அடைந்து அவர்கள் பாதுகாப்பான சாரதித்துவத்தின் ஆர்வலர்களாக மாற வேண்டும்” என்றார்.

போக்குவரத்து விதிகளை முறையாகப் பின்பற்றி, பாதுகாப்பாக வாகனம் ஒட்டுவதன் மூலம் நமதும் மற்றவர்களினதும் வாழ்வதற்கான உரிமைகளை உறுதிசெய்து கொள்வதற்காக இந்த விழிப்புணர்வு கருத்தாடல் செயல்திட்டம் இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த விழிப்புணர்வூட்டல் கருத்தாடல் நிகழ்வில், சட்டவாளர் சந்திரலிங்கம் சந்திரகுமார், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர விபத்துப் பிரிவின் வைத்திய அதிகாரி செபரெட்ணம் பிரான்ஸிஸ் அல்மெய்டா, அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனத்தின் முகாமையாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி சுரேஷ், இளைஞர் அபிவிருத்தி வலுவூட்டல் செயற்திட்ட இணைப்பாளர் அனுலா, நெறியாளர் அகல்யா டேவிட் ஆகியோர் கலந்து கொண்டு பங்குபற்றிய இளைஞர் யுவதிகள் மத்தியில் கருத்துத் தெரிவித்தனர்.

“நாட்டில் நாளாந்தம் ஏராளமான விபத்துக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெறுகின்றன. ஆனால், இந்த அவசர இயந்திர வாழ்க்கை மயப்பட்ட யுகத்தில் நின்று நிதானித்து உற்று நோக்காமல் சிலபோது நாம் விபத்துக்கைளையும் அவை ஏற்படுத்தும் பாரதூர விளைவுகளையும் கண்டு கொள்ளாமல் கடந்து சென்று விடுகின்றோம். இதனால் நாட்டுக்கும் சமூகத்திற்கும் பெரும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

உயிர், உடமை இழப்புக்களும், அதனோடு சேர்த்து அங்கவீனம், வாழ்விழப்பு, சொத்து இழப்புக்களும் ஈடு செய்ய முடியாதவை. எனவே, இதுபற்றி சமதாயத்திலுள்ள அனைவரும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்” என்று வளவாளர்கள் வலியுறுத்தினர்.

கவனக் குறைவான வாகனமோட்டுதலால் ஏற்படும் விபத்துக்களுக்கு பல காரணங்கள் உள்ளன.

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாது வாகனங்களை வேகமாகச் செலுத்துவது, வாகனத்தை முந்திச்செல்ல எத்தனிப்பது, பிழையான வழியில் வாகனங்களைச் செலுத்துவது, திருப்ப வேண்டிய இடங்களில் வேகமாகத் திருப்புவது, மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தவது. வாகனத்தில் இருப்போரை அல்லது மற்றவர்களை குசிப்படுதுவதற்காக வாகனத்தைச் செலுத்துவது, சிறுபிள்ளைகள் வாகனங்களைச் செலுத்தவது போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம். விபத்துக்கள் ஏற்படுவதற்கான வேறு பல காரணங்களும் உள்ளன.

> **தொற்று நோய்களை ஒழிப்பது போன்று பாதைகளில் ஏற்படுகின்ற விபத்துக்களையும் நாம் இல்லாதொழிக்க வேண்டும் என்ற அறைகூவலை ஒவ்வொருத்தரும் மனத்தில் இருத்திச் செயற்பட வேண்டும்**

இந்த விடயங்கள் தொடர்பாக அனைவருக்கும் அறிவூட்ட வேண்டும்.

லொறிகளினாலும் பஸ்வண்டிகளினாலும் இதர மோட்டார் வாகனங்களினாலும் ஏற்படும் விபத்துக்களுடன் மோட்டார் சைக்கிள்களால்தான் அதிக விபத்துக்கள் சம்பவிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க, நாம் எமது குழந்தைகளையும், இளம் பராயத்தினரையும் பாதைகளில் அவதானமாகப் பயணிப்பதற்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். அக்கம் பக்கம் பார்க்காமல் கையடக்கத் தொலைபேசியைக் காதில் வைத்துக்கொண்டு எம்மில் ஏராளமானோர் பயணம் செய்கின்றோம். பிரதான பாதைகளில், ரெயில் பாதைகளில், நெடுஞ்சாலைகளில், எவ்வாறு செல்லவேண்டும் என்ற விதிமுறையை மறந்து நம்மில் பலர் கண்மூடித்தனமாகப் பயணம் செய்கின்றனர். நாமும் இவற்றைப் பார்த்துக் கொண்டு கண்மூடித்தனமாகப் போகின்றோம்.

இப்படி கண்டும் காணாமல் அக்கறையில்லாமல் கண்மூடித்தனமாகப் போவதா இல்லாவிட்டால் இதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதா என்பதை நாம் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

> **பாதசாரிகளும் பயணிகளும் அதிக கவனம் செலுத்த வேண்டும். பிரதான வீதிகள், நெடுஞ்சாலைகள், குறுக்கு வீதிகள் உயிர்பறிக்கும் கொல்களங்களாக இல்லாமல் பாதுகாப்பாகப் பயணிக்கக் கூடிய மலர்ப்பாதைகளாக மாற வேண்டும்**

வீதி விபத்துக்களில் மரணிப்போர் இந்த நாட்டின் சுபீட்சத்திற்காகவும் எழுச்சிக்காகவும் பாடுபடக்கூடியவர்கள். இதில் தனது குடும்பங்களை வாழவைக்கின்ற குடும்பத்தலைவர்களும் மரணிப்பது கவலைக்குரிய விடயமாகும். இதனால் எத்தனையோ குடும்பங்கள் அநாதரவாகிப் போயிருக்கின்றன இதற்காக அரசு என்ற ரீதியில் ஒவ்வொரு வருடமும் பாரிய முதலீட்டை அரசு ஒதுக்க வேண்டியுள்ளது.

அத்துடன் காயம் படுவோரின் சிகிச்சைக்காகவும் அரசு பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகிறது.

மதுபோதையில் முறையற்ற கெடுதலான வாகனமோட்டும் நடத்தைகளில் ஈடுபடும் சாரதிகள் மீது பொலிஸார் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அதுபோல சாரதி அனுமதிப் பத்திரமில்லாமல் அதி வேகமாக, வாகனங்களைச் செலுத்துவோர் மீதும் பொலிஸார் அதிக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூறவேண்டியுள்ளது.

தொற்று நோய்களை ஒழிப்பது போன்று பாதைகளில் ஏற்படுகின்ற விபத்துக்களையும் நாம் இல்லாதொழிக்க வேண்டும் என்ற அறைகூவலை ஒவ்வொருத்தரும் மனத்தில் இருத்திச் செயற்பட வேண்டும்.

இந்தக் குறைபாடுகளையெல்லாம் சரி செய்து சரியான முறையில் வாகனத்தைச் செலுத்தும் நவீன நாகரீகக் காலத்தை நாம் உருவாக்க வேண்டும்.

உரிய அதிகாரிகள் தத்தமது கடமைகளை மதித்து சேவை மனப்பான்மையோடு சட்ட நடவடிக்கைகளை எடுத்து வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாகப் பொலிஸார் மட்டுமல்ல பொதுமக்களும் பாதசாரிகளும் பயணிகளும் அதிக கவனம் செலுத்த வேண்டும். பிரதான வீதிகள், நெடுஞ்சாலைகள், குறுக்கு வீதிகள் உயிர்பறிக்கும் கொல்களங்களாக இல்லாமல் பாதுகாப்பாகப் பயணிக்கக் கூடிய மலர்ப்பாதைகளாக மாற வேண்டும். அதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்போடு செயற்பட்டு இப்போதிருந்தே பாடுபடவேண்டும்

“பாதுகாப்பான பயணம்” என்பது பற்றி சமூகம் உட்பட இளைஞர்களிடையே பாரிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.


## நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட்
## PV 00315729

**2007 ஆம் கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 242 (3) (ஆ) வின்கீழான பகிரங்க அறிவித்தல்.**

நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட் (PV 00281338), நிலையான வருமான முதலீடு ஐஏ (பிறைவேட்) லிமிடெட் (PV 00288307), நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட் (PV 00255136), நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட் (PV 00309628), நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் (PV 00309267) மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் (PV 00315729) என்பவற்றை நிலையான வருமான முதலீடு II (பிறைவேட்) லிமிடெட்டுடன் (PV 00275480) ஒன்றுசேஉத்தல்

(இதனகத்துப்பின்னர் “ஒன்றுசேஉகின்ற உருவகங்களான”) நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு IV (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் அத்துடன் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் என்பவற்றின் பணிப்பாளர் சபை, சட்டத்தின் 242 ஆம் பிரிவின் நியதிகளின்படி, ஒன்றுசேர்கின்ற உருவகங்களை நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட்டினுள் ஒன்றுசேர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் (“சட்டம்”) பிரிவு 242 (3) (ஆ)வின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

உத்தேசிக்கப்பட்ட ஒன்றுசேர்க்கை 2025 சனவரி 14 ஆந்திகதியன்று அல்லது கம்பெனிகள் பதிவாளரினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று பயனுறுதல் வேண்டும்.

சபையின் கட்டளைப்படி
கம்பெனிச் செயலாளர்
நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட்



## நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட்
## PV 00309627

**2007 ஆம் கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 242 (3) (ஆ) வின்கீழான பகிரங்க அறிவித்தல்.**

நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட் (PV 00281338), நிலையான வருமான முதலீடு ஐஏ (பிறைவேட்) லிமிடெட் (PV 00288307), நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட் (PV 00255136), நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட் (PV 00309628), நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் (PV 00309267) மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் (PV 00315729) என்பவற்றை நிலையான வருமான முதலீடு II (பிறைவேட்) லிமிடெட்டுடன் (PV 00275480) ஒன்றுசேஉத்தல்

(இதனகத்துப்பின்னர் “ஒன்றுசேஉகின்ற உருவகங்களான”) நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு IV (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் அத்துடன் நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் என்பவற்றின் பணிப்பாளர் சபை, சட்டத்தின் 242 ஆம் பிரிவின் நியதிகளின்படி, ஒன்றுசேர்கின்ற உருவகங்களை நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட்டினுள் ஒன்றுசேர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் (“சட்டம்”) பிரிவு 242 (3) (ஆ)வின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

உத்தேசிக்கப்பட்ட ஒன்றுசேர்க்கை 2025 சனவரி 14 ஆந்திகதியன்று அல்லது கம்பெனிகள் பதிவாளரினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று பயனுறுதல் வேண்டும்.

சபையின் கட்டளைப்படி
கம்பெனிச் செயலாளர்
நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட்



## நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட்
## PV 00309628

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 242 (3) (ஆ) வின்கீழான பகிரங்க அறிவித்தல்.**

நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட் (PV 00281338), நிலையான வருமான முதலீடு ஐஏ (பிறைவேட்) லிமிடெட் (PV 00288307), நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட் (PV 00255136), நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட் (PV 00309628), நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் (PV 00309267) மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் (PV 00315729) என்பவற்றை நிலையான வருமான முதலீடு II (பிறைவேட்) லிமிடெட்டுடன் (PV 00275480) ஒன்றுசேஉத்தல்

(இதனகத்துப்பின்னர் “ஒன்றுசேஉகின்ற உருவகங்களான”) நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு IV (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு V (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட், நிலையான வருமான முதலீடு VII (பிறைவேட்) லிமிடெட் மற்றும் நிலையான வருமான முதலீடு VIII (பிறைவேட்) லிமிடெட் அத்துடன் நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட் என்பவற்றின் பணிப்பாளர் சபை, சட்டத்தின் 242 ஆம் பிரிவின் நியதிகளின்படி, ஒன்றுசேர்கின்ற உருவகங்களை நிலையான வருமான முதலீடு III (பிறைவேட்) லிமிடெட்டினுள் ஒன்றுசேர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் (“சட்டம்”) பிரிவு 242 (3) (ஆ)வின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

உத்தேசிக்கப்பட்ட ஒன்றுசேர்க்கை 2025 சனவரி 14 ஆந்திகதியன்று அல்லது கம்பெனிகள் பதிவாளரினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று பயனுறுதல் வேண்டும்.

சபையின் கட்டளைப்படி
கம்பெனிச் செயலாளர்
நிலையான வருமான முதலீடு VI (பிறைவேட்) லிமிடெட்

பா.லோகேஸ்வரி
உளவியல் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்




# நாளை ஒரு செய்தி

**இன்றைய காலகட்டத்தில் எல்லா இடங்களிலும் மிக முக்கியமான ஒரு பேசுபொருளாக தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளுதல் காணப்படுகிறது . ஏன் நம்மை நாமே மாய்த்துக் கொள்ள வேண்டும், எதற்காக மாய்த்துக் கொள்ள வேண்டும், இந்த அற்புத உலகின் விசித்திரமான படைப்பு தான் மானிட பிறவி. மனிதனின் வாழ்க்கை ஒரு சமனிலையற்ற பாதை. அதில் இன்பமும் துன்பமும் மாறி மாறி நகர்ந்து கொண்டே இருக்கும். ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில்ஆயிரம் துன்பங்களை, சவால்களையும் சந்திக்கிறான். இத்துன்பத்தையும், சவால்களையும் முகங்கொடுத்து சாதித்து வருகிறான் ஒருவன். பிரச்சினையை காணாமலே தன்னை தானே மாய்த்துக் கொள்கின்றான் இன்னொருவன். தன்னுயிரை மாய்த்தல்: (suicide) என்பது விருப்பத்துடன் ஒருவர் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளும் செயலாகும்.**

மன அழுத்தம், மனப்பித்து இருமுனையப் பிறழ்வு, ஆளுமைச்சிதைவு, குடிப்பழக்கம் குற்றவுணர்வு, இயலாமை, வெட்கம், கடுமையான உடல்வலி, பென்சோடையசிபைன்கள் பயன்பாடு போன்ற பல காரணங்களில் ஒன்றோ அல்லது பல காரணங்களோ ஒருவரை உயிர்துறக்க தூண்டலாம்.

பொருளாதாரச் சிக்கல்கள், அடாவடியாக கொடுமைக்கு ஆளாதல், உறவுகளின் பிரச்சினைகள் போன்ற மன அழுத்தக் காரணங்களும் ஒருவரை துண்டலாம். தன்னுயிரை மாய்க்கும் முயற்சியில் ஒருமுறை ஈடுபட்ட ஒருவர் எதிர்காலத்தில் மீண்டும் முயற்சி செய்யும் சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளன.

தன்னுயிரை மாய்த்துக்கொள்ளல் ஒரே ஒரு காரணத்தினால் நிகழ்வது போல தோன்றினாலும், உண்மை அதுவல்ல. ஒவ்வொரு சம்பவங்களின் பின்னணியிலும் பல்வேறு உயிரியல், உளவியல் மற்றும் சமூக காரணிகள் உண்டு. 90 சதவீத தன்னுயிரை மாய்த்துக்கொள்வதற்கு மன அழுத்தம்மட்டும் காரணமாகிறது.

மது பழக்கத்தினால் தவறான முடிவுகளை தேடுகிறவர்கள் பலர். குடும்பத்தில் நெருங்கிய உறவினர்களை உயிரை மாய்த்துக்கொண்டால், அவர்களுக்கு அதே எண்ணம் ஏற்படுவதற்கான மரபணு சார்ந்த ஆபத்து உண்டு. இதைத்தவிர, உளவியல் ரீதியான பிரச்சனைகள் இன்றைய தலைமுறையினருக்கு அதிகம். உலகளவில் கடந்த 45 ஆண்டுகளில் தன்னுயிரை மாய்த்தல் 60 சதவீதம் அதிகரித்துள்ளது.

15 முதல் 45 வயது வரை ஏற்படும் உயிரிழப்புகளுக்கு தன்னுயிரை மாய்த்தல் ஒரு முக்கிய காரணம். நம்முடைய பாட்டி, தாத்தாக்கள் பெரிய சுனாமியை எதிர்த்து நின்று ஜெயித்தபோது, வாழ்க்கையில் ஒரு சிறு அலை இன்றைய தலைமுறையினரை ஏன் அடித்துச் செல்கிறது? உளவியல் ரீதியாக இதை ‘ Resilience’ என்கிறோம். ஒரு பந்தை தரையில் தட்டினால், அது மீண்டும் மேலே எழுவது போல் நாம் ஒவ்வொருவர் உள்ளிலும் சவால்களை சமாளிக்கும் தன்மை புதைந்து கிடக்கிறது.

**அந்த எண்ணம் கொண்டோர் மனதின் உட்புற மாற்றங்கள் மட்டும் அல்லாமல், உடலின் பயங்கரமான உயிரியல் மாற்றங்களும் ஏற்படும்.**

**அந்த எண்ணம் கொண்டோர் மனதின் உட்புற மாற்றங்கள் மட்டும் அல்லாமல், உடலின் பயங்கரமான உயிரியல் மாற்றங்களும் ஏற்படும்.** **எண்ணம் மற்றும் அதன் பிறகு மன அழுத்தம், கவலை மற்றும் சோர்வு ஆகியவை மைய சிரமத்துக்குரிய உயிரியலான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.**

**உள்ளுணர்வு கோளாறு [Psychological Disorders] பிரமாண விரோதம், தன்னம்பிக்கை குறைபாடு போன்ற உளவியல் நிலைகள் உட்பட, மனஅழுத்தம் மற்றும் உளவியல் நோய்கள் அந்த எண்ணங்களின் முக்கிய காரணமாக இருக்க முடியும்.**

மன அழுத்தம், மனப்பித்து இருமுனையப் பிறழ்வு, ஆளுமைச்சிதைவு, குடிப்பழக்கம் குற்றவுணர்வு, இயலாமை, வெட்கம், கடுமையான உடல்வலி, பென்சோடையசிபைன்கள் பயன்பாடு போன்ற பல காரணங்களில் ஒன்றோ அல்லது பல காரணங்களோ ஒருவரை உயிர்துறக்க தூண்டலாம்.

பொருளாதாரச் சிக்கல்கள், அடாவடியாக கொடுமைக்கு ஆளாதல், உறவுகளின் பிரச்சினைகள் போன்ற மன அழுத்தக் காரணங்களும் ஒருவரை துண்டலாம். தன்னுயிரை மாய்க்கும் முயற்சியில் ஒருமுறை ஈடுபட்ட ஒருவர் எதிர்காலத்தில் மீண்டும் முயற்சி செய்யும் சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளன.

தன்னுயிரை மாய்த்துக்கொள்ளல் ஒரே ஒரு காரணத்தினால் நிகழ்வது போல தோன்றினாலும், உண்மை அதுவல்ல. ஒவ்வொரு சம்பவங்களின் பின்னணியிலும் பல்வேறு உயிரியல், உளவியல் மற்றும் சமூக காரணிகள் உண்டு. 90 சதவீத தன்னுயிரை மாய்த்துக்கொள்வதற்கு மன அழுத்தம்மட்டும் காரணமாகிறது.

மது பழக்கத்தினால் தவறான முடிவுகளை தேடுகிறவர்கள் பலர். குடும்பத்தில் நெருங்கிய உறவினர்களை உயிரை மாய்த்துக்கொண்டால், அவர்களுக்கு அதே எண்ணம் ஏற்படுவதற்கான மரபணு சார்ந்த ஆபத்து உண்டு. இதைத்தவிர, உளவியல் ரீதியான பிரச்சனைகள் இன்றைய தலைமுறையினருக்கு அதிகம். உலகளவில் கடந்த 45 ஆண்டுகளில் தன்னுயிரை மாய்த்தல் 60 சதவீதம் அதிகரித்துள்ளது.

15 முதல் 45 வயது வரை ஏற்படும் உயிரிழப்புகளுக்கு தன்னுயிரை மாய்த்தல் ஒரு முக்கிய காரணம். நம்முடைய பாட்டி, தாத்தாக்கள் பெரிய சுனாமியை எதிர்த்து நின்று ஜெயித்தபோது, வாழ்க்கையில் ஒரு சிறு அலை இன்றைய தலைமுறையினரை ஏன் அடித்துச் செல்கிறது? உளவியல் ரீதியாக இதை ‘ Resilience’ என்கிறோம். ஒரு பந்தை தரையில் தட்டினால், அது மீண்டும் மேலே எழுவது போல் நாம் ஒவ்வொருவர் உள்ளிலும் சவால்களை சமாளிக்கும் தன்மை புதைந்து கிடக்கிறது.

மன அழுத்தம் (Depression) இது தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணங்களின் மிக முக்கியமான காரணமாகும். மன அழுத்தம் உள்ளவர்கள் தங்களுக்கு எதிரான தீவிர உணர்வுகளை, தாழ்வு நிலையை, மற்றும் வருத்தத்தை அனுபவிப்பார்கள், இது தற்கொலை எண்ணங்களைத் தூண்டலாம். அலோசனை தாழ்வு (opelessness) மனதை நிறுத்துவதற்கும், எதிர்காலம் பற்றி நம்பிக்கை இழப்பதற்கும் ஒருவன் அனுபவிக்கக் கூடிய உணர்வு.

இப்போது வாழ்க்கையில் இருக்கும் சிக்கல்களும் பிரச்சினைகளும் தீர முடியாதவையாகக் கருதப்படும் போது, தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணங்கள் உருவாகலாம். வயது மற்றும் வாழ்க்கை நிலைகள் (Life Stressors) அதாவது குடும்ப பிரச்சினைகள், பணியிடம் குறைபாடுகள், அல்லது நேசமுடன் நிறைந்த உறவுகளின் இழப்பு போன்ற மன உளைச்சல் காரணிகள் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணங்களுக்கு வழிவகுக்கும்.

உள்ளுணர்வு கோளாறு (Psychological Disorders) பிரமாண விரோதம், தன்னம்பிக்கை குறைபாடு போன்ற உளவியல் நிலைகள் உட்பட, மனஅழுத்தம் மற்றும் உளவியல் நோய்கள் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணங்களின் முக்கிய காரணமாக இருக்க முடியும். உறவுகளின் கோளாறுகள் (Relationship Issues) காதல் அல்லது திருமண உறவுகள், நண்பர்களுடன் இடைவெளி அல்லது குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் மனிதனை மன அழுத்தத்திற்குள் தள்ளலாம்.

மூலிகை மற்றும் மருந்துகளின் பின்விளைவுகள், மது, போதைப் பொருள் பயன்பாடு, மருந்துகளின் அதிகபட்ச பயன்பாடு போன்றவை மனச்சிறுமை மற்றும் முடிவுகளுக்கு வழிகாட்டலாம். கடவுளுக்கு எதிரான கோபம் அல்லது நம்பிக்கை , eg; (Existential Crisis) வாழ்க்கையின் பொருள் அல்லது தனிப்பட்ட உற்றவையாக இருப்பது பற்றிய குழப்பம், கடவுளின் முன் உணர்வுகள், அல்லது வாழ்வின் உயர்ந்த நோக்கம் பற்றிய கேள்விகள் தன்னுயிரை மாய்க்கும் எண்ணங்களை ஏற்படுத்தும்.

தன்னுயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டோர் மனதின் உட்புற மாற்றங்கள் மட்டும் அல்லாமல், உடலின் பயங்கரமான உயிரியல் மாற்றங்களும் ஏற்படும். (Neurochemical Changes) தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணம் மற்றும் அதன் பிறகு மன அழுத்தம், கவலை மற்றும் சோர்வு ஆகியவை மைய சிரமத்துக்குரிய உயிரியலான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

Serotonin மற்றும் Norepinephrine போன்ற உணர்ச்சிகளை கட்டுப்படுத்தும் நரம்பியல் ரசாயனங்கள் குறைவடைய ஆரம்பிக்கின்றன. டோபமின் (Dopamine) குறைபாடுகளும் உள்ளன, இது ஒருவரின் மனநிலையை பாதிக்கக்கூடியது. Oxidative Stress, தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணங்கள் அல்லது மன அழுத்தம் மிகுந்த நிலையில் உடலில் ஆயன்கள் (free radicals) அதிகரிக்கின்றன, இதன் காரணமாக உயிரணுக்கள் சேதமடையும்.

இது உடலின் குருதி ஓட்டம் மற்றும் நரம்பு வலுவை குறைப்பது போன்ற பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணங்களால் இன்சுலின் மற்றும் கோர்டிசோல் (Cortisol) போன்ற ஹார்மோன்களின் அளவு அதிகரிக்கின்றது. இது மன அழுத்தத்தை மேலும் தீவிரப்படுத்துவதுடன் உடல் பின்விளைவுகளை உண்டாக்கும்.

இதயதுடிப்பில் மாற்றம் ஏற்படுதல், இரத்த அழுத்தத்தில் அதிகரிப்பு, நரம்பியல் மாற்றங்கள் அதாவது தன்னுயிரை மாய்க்கும் எண்ணங்களின் போது, Prefrontal Cortex மற்றும் யுஅலபனயடய போன்ற மூளை பகுதிகள் மிகுந்த பண்பாட்டில் செயல்படுகின்றன. துயர், அதிர்ச்சி மற்றும் ஆத்திரம் போன்ற உணர்வுகளை அதிகரிக்கின்றது. இந்த நிலையில், அனுபவ உணர்வுகள் மற்றும் பின்விளைவுகளை மானசிகமாக கையாளுவதில் சிரமம் ஏற்படுகிறது. மன அழுத்தத்தின் போது, உறுப்பு சீரழிவு அல்லது உயிரணு ஊதல் போன்ற உடல் பாதிப்புகள் நேரலாம். இதனால் மூளை மற்றும் தசை செயல்பாடுகள் குறைவாக செயல்படும். தன்னுயிரை மாய்த்துக்கொள்வதற்கான எண்ணம் அல்லது மன அழுத்தத்தின் போது, உணவு மற்றும் நீர்சத்து குறைவாக உணரப்படுகின்றது. இதன் காரணம் உடல் சோர்வு மற்றும் பலவீனமோடு கூடிய சிக்கல்கள் ஏற்படலாம்.

தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணம் கொண்ட நபர்களை கண்டறிதல் மிக முக்கியம் மற்றும் நுணுக்கமாக கவனிக்கப்படும் ஒன்று. தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் ண்ணம் கொண்ட நபர்கள், மனம் குழப்பமாக இருக்கலாம். அவர்கள் வழக்கமாக ஏமாற்றப்பட்டதாக உணரலாம்.

ஒருவர் துயரத்தில் அல்லது சோர்வு அல்லது மன அழுத்தத்தில் எப்போதும் ஒரு யோசனையுடனே இருப்பார். எல்லா விடயங்களிலும் குறைந்த ஆர்வம் அல்லது மனநிலையின் விகிதாசாரத்தில் சீரான மாற்றங்கள் தோன்றுவது. ‘எனக்கு இந்த வாழ்க்கை சரியாக இருக்காது’, போன்ற குரலை கேட்டுக் கொண்டே இருப்பார்கள். தன்னுயிரை மாய்த்துகொள்வது பற்றி இணையதளத்தில் ஆராய்ச்சி செய்தல் அல்லது கவலை அளிக்கும் அறிகுறிகளை வெளியிடுதல்.

தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணம் கொண்ட நபர், முன்பு இருந்த இடத்தில் மிகுந்த உறவுகளையும், தொடர்புகளையும் தவிர்க்க ஆரம்பிக்கலாம்.தானாக தனிமை கொள்ளுதல். தனிமையில் நிற்கும் போது மற்றவர்களைத் தவிர்க்கலாம். தனது பொறுப்புக்களை ஏனையோரிடம் கையளிப்பார்கள். உடல் நலம் பாதிக்கப்பட்டதாகக் கூறுவது அல்லது உடலை கவலைக்கிடமாகக் காட்டுவது. போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தி கொண்டே இருப்பார்கள்.

நெருக்கடியான சூழல்கள் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்வதற்கு பொதுவானவை என்றாலும், அவற்றின் செயல்திறன் குறைவாகவே உள்ளது. நீண்டகால மன அழுத்தம், வருத்தம் மற்றும் உயிரியல் மாற்றங்களின் ஒரு பயங்கரமான அறிகுறி. இது உடல் மற்றும் மனத்தின் இரண்டையும் பாதிப்பதால், முழுமையான மருத்துவ உதவி மற்றும் மனவளக்கோடு (therapy) தேவைப்படும். எனவே சிறந்த உளவளத்துணையை நாடுவது சாலச்சிறந்தது.

**“ எந்தவொரு பிரச்சினைக்கும் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்வது தீர்வல்ல”**

# யூனியன் வங்கி - தேசிய தொழில்முயற்சியாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டம்



யூனியன் வங்கி சமூக தொழில்முயற்சியாண்மை பாடசாலையினால் (UBSSE) முதலாவது செயற்திட்டமான தேசிய தொழில்முயற்சியாண்மை விருத்தி நிகழ்ச்சியை (NEDP), மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் தேசிய புத்தாக்க முகவர் அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இலங்கை முழுவதிலும் எதிர்பார்ப்புகள் நிறைந்த தொழில்முயற்சியாளர்களுக்கும், பொருத்தமான ஆரம்பநிலை சிந்தனைகளைக் கொண்டுள்ளவர்களுக்கும் வலுவூட்டும் வகையில் இந்த இணைந்த முயற்சி அமைந்திருப்பதுடன், தமது வியாபாரங்களை கட்டியெழுப்பிக் கொள்ளவும், விஸ்தரித்துக் கொள்ளவும் அத்தியாவசிய அறிவு மற்றும் திறன்களை பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

யூனியன் வங்கியின் சந்தைப்படுத்தல் உப தலைவர் திஷானி திசாநாயக்க குறிப்பிடுகையில், “நேபாளத்தின் CG Corp Global Group இன் Nabil Bank இன் வெற்றிகரமான திட்டமான NabilSSE இன் பிரகாரம் UBSSE முன்னெடுக்கப்படுகின்றது. இது CG Corp Global இன் முகாமைத்துவ பணிப்பாளரும், யூனியன் வங்கியின் பிரதி தவிசாளருமான நிர்வாணா சௌத்ரியின் சிந்தனை வெளிப்பாடாகும். இலங்கையின் தொழில்முயற்சியாளர்களுக்கு வலுவூட்டுவது மற்றும் இலங்கையில் உறுதியான தொழில்முயற்சியாண்மை கட்டமைப்பை நிறுவுவது போன்றன அவரின் நோக்காக அமைந்துள்ளது. எமது சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்க நாம் எதிர்பார்க்கும் பெறுமதி சேர் அம்சமாக இந்தத் திட்டம் அமைந்துள்ளதுடன், அவர்களுக்கு தமது வியாபார கொள்ளளவை திரட்டி, வளர்ச்சியை முன்னெடுக்க உதவியாக அமைந்திருக்கும். முக்கியமாக, யூனியன் வங்கிக்கு மாத்திரம் NEDP திறந்திருப்பது மட்டுமன்றி, பொது மக்களுக்கும் விரிவாக்கப்பட்டு, நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த தொழில்முயற்சியாளர்களுக்கு, இந்த பெறுமதி வாய்ந்த நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அனுகூலம் பெற வாய்ப்பை வழங்கும்.” என்றார்.

மூலோபாய விருத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக நாமமிடல், ஊழியர் சட்டம், வியாபார திட்டமிடல், கணக்கீடு மற்றும் நிதியியல், ஒழுக்கச் செயற்பாடுகள், புலமைச் சொத்து மற்றும் தலைமைத்துவம் போன்ற முக்கிய வியாபாரப் பிரிவுகளில் பரந்த பயிலல் அனுபவத்தை NEDP ஒன்லைன் பயிற்சிப் பட்டறை வழங்கும். பங்குபற்றுனர்களுக்கு நிபுணத்துவ வழிகாட்டல், தொடர்புகளை பேணும் பயிற்சிப்பட்டறைகள் மற்றும் நேரடி பயிற்சிகள் போன்றன வழங்கப்படும். அதனூடாக தொழில்முயற்சியாண்மை ஆற்றல்களை மேம்படுத்தவும், தமது வியாபாரங்களை விரிவாக்கம் செய்யவும் உதவியாக அமைந்திருக்கும். இந்த கற்கை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும்பட்சத்தில் சான்றிதழ் வழங்கப்படும். 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கை பிரஜைகளுக்கு இதில் பங்கேற்க முடியும். NEDP இல் 200 பேருக்கு பங்கேற்கும் வாய்ப்புள்ளது. பங்குபற்றுனர்களுக்கு வியாபார வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்தை நாடு முழுவதிலும் கட்டியெழுப்புவதற்கு அவசியமான திறன்களை விருத்தி செய்து கொள்ள சிறந்த பிரத்தியேகமான வாய்ப்பாக இது அமைந்திருக்கும்.

மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகள் காணப்படுவதால், இந்த கற்கைக்கான விண்ணப்பங்களை மற்றும் ஆர்வமுள்ளவர்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

# Cinnamon Hospitality Academy திறப்பு



Cinnamon Hotels & Resorts மற்றும் Sis Hotel Management Academy (SHMA) ஆகியவற்றின் Cinnamon Hospitality Academy, தனது அங்குரார்ப்பண தொகுதியாக,43 (நாற்பத்து மூன்று) மாணவர்களை வரவேற்று தனது தொழிற்பாடுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது.

Ecole htelire de Lausanne (EHL) Professional Diploma வழங்கும் சர்வதேசரீதியாக அங்கீகாரம் பெற்ற தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (Vocational Education and Training - VET) டிப்ளோமா கற்கைநெறி மூலமாக, இலங்கையில் விருந்தோம்பல் துறை கல்விக்கு இக்கூட்டாண்மை மீள்வரைவிலக்கணம் வகுக்கவுள்ளது. விருந்தோம்பல் முகாமைத்துவத்திற்கு உலகின் முதற்தர பல்கலைக்கழகமாகத் திகழும்EHL,மாணவர்களுக்கு சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்படுகின்ற தகைமை கிடைப்பதை உறுதி செய்து, தலைசிறந்த நிபுணத்துவத்தை இக்கூட்டு முயற்சி கொண்டுவரவுள்ளது.

இலங்கையில் எதிர்கால விருந்தோம்பல் துறை தலைவர்களுக்கு வலுவூட்டுவதில் சாதனை மைல்கல்லொன்றை Cinnamon Hospitality Academy இன் ஆரம்பம் குறித்து நிற்கின்றது. Cinnamon Hotels & Resorts பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம தொழிற்பாட்டு அதிகாரி ஹிஷான் சிங்கவன்ச இந்நிகழ்வில் உரையாற்றுகையில், “இலங்கையில் விருந்தோம்பல் துறை தொழில் வல்லுனர்களின் அடுத்த தலைமுறையை வளர்ப்பதில் முன்னின்று செயற்பட்டு வருகின்ற எமக்கு, Cinnamon Hospitality Academy இன் அங்குரார்ப்பணம் எமக்கு பெருமைமிக்க தருணமாக மாறியுள்ளது. SHMA உடன் ஒத்துழைத்து, EHL Professional Diploma வழங்கும் VET கற்கைநெறி, நிஜ உலகின் நடைமுறைப் பயிற்சியுடன் சர்வதேச தராதரங்களை இணைக்கும் வகையில் ஒப்பற்ற கல்வி அனுபவமாக அமையும். இம்முயற்சியானது தொழில்துறையில் புதிய தர ஒப்பீட்டு நியமங்களை நிலைநாட்டுவது மாத்திரமன்றி, இப்பிராந்தியத்தில் அபிமானம் பெற்ற தொழில்தருநர் என்ற எமது ஸ்தானத்தையும் வலுப்படுத்துகின்றது,” என்று குறிப்பிட்டார்.

Cinnamon Hospitality Academy பின்பற்றும் கற்கைநெறி, Sis Gold Standard Framewrk ஐ அடிப்படையாகக் கொண்டது என்பதுடன், சமையல் கலை (Culinary), உணவு மற்றும் பான வகை சேவை (Food & Beverage Service) மற்றும் ஹோட்டல் தொழிற்பாடுகள் (Hotel Operations) ஆகிய மூன்று விசேட துறைகளின் கீழ் கல்வியை வழங்குகின்றது. EHL வழங்கும் VET கற்கைநெறி, Cinnamon Hotels & Resorts இன் கீழ் கொழும்பிலுள்ள அதன் ஹோட்டல்களில் இரு தினங்களுக்கு கோட்பாடு மற்றும் நடைமுறை கல்வியுடனும், நான்கு தினங்களுக்கு ‘வேலையின் போதே கற்றுக்கொள்ளும்’ (on-the-job) பயிற்சியுடனும், ‘கற்றல், பணிபுரிதல் மற்றும் உழைத்தல்’ (Learn, Work & Earn) அடிப்படையில் பணிப்பயிற்சியை வழங்கும் வகையில் முன்னெடுக்கப்படுகின்றது.

Cinnamon Hospitality Academy இன் ஆரம்பம், இலங்கையில் விருந்தோம்பல் கல்வியில் புதிய அத்தியாயமொன்றைக் குறித்து நிற்பது மாத்திரமன்றி, இத்துறையில் மகத்துவம், புத்தாக்கம் மற்றும் அரவணைப்பு உள்ளடக்கம் ஆகியவற்றை வளர்க்கும் பரந்த அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கின்றது.



## பெண்மையே...

பெண்மைபோற்றும் பாரதியின்...
அருமைபெருமை பேசுவதுமாய் ...
வார்த்தைகளில் வாழ்வதுமாய்
அவர்கள் சொல்கிறார்கள்...

தம்முடன் கூட இருப்பவர்களையே
விலைபேசியும்...
விற்பனைசெய்தும் தான்...
உறவுகளைத் தேடிக்கொள்ளும்
புத்திசாதுரியமும்...
மனங்களைக் கவரும்
மாய தந்திரமும்...
பெற்றுள்ளனர்...

நம்பிக்கை துரோகத்திற்கும்
நயவஞ்சகத்திற்கும்
புதியபெயரை சூட்டச் சொன்னால்...
புதுமைக் கவி பாரதியே
அவர்கள் பெயரைதான்..
சிபாரிசும் செய்வார்...

அவரின்...
அழகிய வாழ்வியல் விழுமியங்களையும்...
பெண்மைபோற்றும் புதியவரை முறைகளையும்
தங்களுக்கேற்றது போல்
சாதகமாக்கிக் கொண்டதற்கு...
மரண தண்டனைக்கும் கட்டளையிடுவார்...

பாவம் அவர்...
பெண்மையை போற்ற விளைந்தவர்...
அவரது பெயரைச் சொல்லி சொல்லியே...
அத்தனை அநியாயங்களையும்
செய்துவிட்டுபோகும்..
சில்லறைகளையெல்லாம்
ஒருதடவை...
சிதறவிட்டிருப்பாரோ என்னவோ...

ஆனால்நி ச்சயம்...பதறவிட்டிருப்பார்
மொத்தபொய்களுக்கும்
தன்னையே சுட்டி நின்று...
பழி..பாவம் செய்வோரையும்..
போலி வேஷமிடுவோரையும்..

ஒன்றுமேஅறியாமல்...
ஏமாளியாகவும் ...
அதீதநம்பிக்கையுடன்...
கூட இருப்பவர்களுக்கே
எல்லாவற்றையும்...
சுட்டிக்காட்டியுமிருப்பார்

இவர் தான்...
குலதுரோகி என்றும்
இனவிரோதி என்றும்...

எம்போல்..
எந்தவித பாவம் பரிதாபமும் பார்க்காமல்

ஆம்.. அவரும் வீரத் தந்தைதான் ...



வசுநிர்மல்



## பாரதி நீ மீண்டும் வரவேண்டும்..!

பண்பாடுகளைத் தொலைத்து
தன்னெண்ணம் போலலையும்
மந்தைகள் கூட்டமாய்
மனிதர் மாறிவிட்டதால்
மீண்டும் அவனை மீட்டெடுக்க
பாரதி நீ மீண்டும் வரவேண்டும்.


தாய் மொழியை மறந்து
தன்னினத்தின் மேன்மைகளை மறந்து
வாய்சொல்லும் மொழியெல்லாம்
வஞ்சகப் பொய்மொழியாய்
மாறிவிட்ட மனிதனை
தடுத்தாட்கொள்ள...
பாரதி நீ மீண்டும் வரவேண்டும்.

பண்டிதத் தமிழில் பக்குவமாய்
சீர் தளை எண்ணி
கவிதை சொல்லுவதே
ஏற்ற கவிதையென எண்ணியிருந்த
மூடுமந்திரக் கவிதை முகமூடியை
உன்கவி ஆளுமையால்
கிழித்தெறிந்து கவிதைக்கு
விடுதலை தந்தவன் நீ.. ஆனாலும்
நவீனம் பின்நவீனமென்ற
இருண்மைச் சிறையில் கவிமகளை
அடைத்து வேடிக்கைகாட்டும்
புதிய மெத்தனப் போக்கை
வேரொடு சாய்க்க
பாரதி நீ மீண்டும் வரவேண்டும்.

ஏழ்மை தொலைய இல்லாமை நீங்க
ஏற்றத்தாழ்வென்னும்
கீழ்மை அழிந்தொழியப்
பலத்த குரலொலியில் நீ
பாடினாய் பாடினாய் ஆனாலும்...
இன்னும் எதுவும் ஒழியவில்லை.
மாதர் அடிமைத்தனம்
மனுக்குலத்தின் மடமைத்தனம்
நாட்டின் அடிமைமோகம்
உயிர்ப்புடன் இன்னும் எங்கும்
உலாவந்து ஆட்சிசெய்யும்
காலந்தான் இன்னும் நாம் நித்தம்
காணுகின்ற காட்சிகளாய்....

நீதி நிலைக்க நேர்மைகள் மேலோங்க
மக்கள் கவலைகள் மாயமாக
ஊழல்களும் இரத்தம் உறுஞ்சும்
அட்டைகளும் மண்ணில் புதைந்து
மறைந்தழிந்து போக...
புதிய யுகமொன்று புலர்ந்து
புன்னகையும் மேலோங்கி
இனிய மானுடம் தளைத்தோங்க
மகாகவியே நீ இந்த மண்ணில்
மீண்டும் வரவேண்டும்... வரவேண்டும்.!
விடியலொன்றை நாம்
காண..!

ஷெல்லிதாசன்...



## பார்போற்றும் பாரதி...



தேன் கவிச்
சொற்சுவை
அவன் கொடுத்தான்

ஞானத் தீச்சுடர்
கவியவன்
அவதரித்தான்

மானுட மேன்மை
மாட்சி பெற்றிட
பாரதப் பாரதி
அவதரித்தான்

பெண்கள் அடிமை
பொசுங்கிடவே
பெண்ணாய் நின்றவன்
கவிப் போர் தொடுத்தான்


நான் வீழ்வேன் என்று
நினைத்தாயோ?
என்றுலகில்
வீழ்ந்திடாமல்
எங்கும் வாழ்ந்து நின்றான்

ராவண தமிழச்சி



## பாட்டுக்கொரு புலவன் பாரதி

பாரதம் ஈன்ற விடுதலைச் சுடரே
பாவலர் நாவில் இனிக்கும் தமிழே
தமிழை உயிராய் தலையில் கொண்டு
தாயகம் காத்திடும் தேசியக் கவியே
அழகியல் சிந்தனை அறிவுடன் புனைந்து
அகிலம் வணங்கும் அற்புத அறிஞன்
இலக்கணக் கட்டின் இறுக்கம் தணிய
இலகு மொழியில் பாடல்கள்
படைத்தனன்
படித்தவர் அன்றி பாமரர் பயில
பாப்பாப் பாட்டு கூவிய குயிலே
நவீன கவிதையின் நாயகன் நீயே
நங்கையர் விடுதலைத் தாகம் உனதே
கவிதையை வரைவோன் கவிஞனே
அல்ல
கவிதையே வாழ்க்கையாய் வாழ்பவனே
கவிஞன்
பன்மொழிப் புலமையில் பாரதம் கண்டு
பாஞ்சாலி சபதம் உரைத்த பாவலன்
சக்தி தாசனாய் காணியை வேண்டி
சாதியின் வெறிக்குச் சாட்டை
கொடுத்தாய்
சங்கத் தமிழின் இனிமையை வியந்து
சாதனைப் பாடல்கள் முழங்கிய முரசே
புதிய கவிதையின் சிந்தனைச் சிற்பியே
புதுமை நதியின் ஓடமே பாரதி[illegible]





சம்பூர் சமரன்



சூடான்

துணை இராணுவப்படை வீரர்களின்

# முகாம்கள் மீது குண்டு தாக்குதல்; 127 பேர் பலி

சூடானில், உள்நாட்டு போர் நீடித்து வரும் நிலையில் துணை இராணுவப்படை வீரர்களின் முகாம்கள் மீது குண்டு வீசப்பட்டது. இதில் 127 பேர் உயிரிழந்தனர்.

ஆப்பிரிக்க நாடான சூடானில் கடந்த 2021ஆம் ஆண்டு இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் ஆட்சியை நடத்தி வருகிறார்.

துணை இராணுவ படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை இராணுவத்துடன் இணைக்க இராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் முயற்சி மேற்கொண்டார்.

இதற்கு துணை இராணுவப்படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது. இதனால் இராணுவத்துக்கும், துணை இராணுவத்துக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

2022ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போராக மாறி கடுமையான சண்டை நடைபெற்று வருகிறது. சுமார் 2 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த போரில், பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர். அங்குள்ள கிராமங்களை துணை இராணுவப்படை வீரர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, இராணுவ ஆட்சியை கவிழ்க்க சதி தீட்டி வருகின்றர்.

இந்த நிலையில் துணை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களை குறிவைத்து ராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில், பொதுமக்கள் உட்பட 127 பேர் உயிரிழந்தனர்.

இதற்கு துணை இராணுவம் பதிலடி கொடுக்கும் என்பதால் உள்நாட்டு போர் தீவிரம் அடையும் என்று கூறப்படுகிறது.

தென்கொரியா

## தென்கொரியா ஜனாதிபதி விரைவில் கைதாவார்?



தென்கொரியா ஜனாதிபதி யூன் சுக் இயோலை கைது செய்ய முக்கிய ஆவணங்கள் திரட்டப்பட்டு வருவதால், அவர் விரைவில் கைது செய்யப்படலாம் என, அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தென்கொரியாவில் கடந்த 3ஆம் திகதி, ஜனாதிபதி யூன் சுக் இயோல் திடீரென இராணுவ அவசர நிலையை பிரகடனப்படுத்தினார். பின்னர் மக்களின் கடும் எதிர்ப்பால் அவசர நிலையை மீளப்பெற்றுக்கொண்டார்.

இதற்கிடையே, அவசர நிலையை அறிவிக்க தூண்டுதலாக இருந்ததாகவும், அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டி, இராணுவ அமைச்சர் கிம் யாங் ஹியூன் கைதுசெய்யப்பட்டார்.

தலைநகர் சியோலில் உள்ள சிறையில் அவர் அடைக்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், நேற்று (12) கழிவறைக்கு சென்ற அவர், தனது ஆடையை கிழித்து தூக்குப்போட்டு தற்கொலைக்கு முயன்கொள்ளும்.

ஆப்கானிஸ்தான்

## அகதிகள் விவகாரத்துறை அமைச்சு அலுவலகத்தில் தற்கொலைப்படை தாக்குதல்

### அமைச்சர் உட்பட அறுவர் பலி

ஆப்கானிஸ்தானில், அகதிகள் விவகாரத்துறை அமைச்சு அலுவலகத்தில், புதன்கிழமை (11) காலை நடந்த தற்கொலைப்படை தாக்குதலில், அமைச்சர் கலில் ஹக்னி உயிரிழந்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில், தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது. இதில் அகதிகள் விவகாரத்துறை அமைச்சராக கலில் ஹக்னி. செயற்பட்டு வந்தார்.



இந்நிலையில், காபுலில் உள்ள அகதிகள் விவகாரத்துறை அமைச்சக அலுவலகத்தில், புதன்கிழமை (12), அமைச்சர் கலில் ஹக்னி வழக்கமான பணிகளை செய்துகொண்டிருந்தார்.

அப்போது, அமைச்சின் அலுவலகத்திற்கு வந்த நபர் தன் உடம்பில் மறைத்து கொண்டுவந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்தார்.

அலுவலகத்தில் நடந்த இந்த தற்கொலைப்படை தாக்குதலில், அமைச்சர் கலில் ஹக்னி உயிரிழந்தார்.

மேலும், அலுவலக ஊழியர்கள் மேலும் 5 பேரும் உயிரிழந்தனர்.

இந்த தற்கொலைப்படை தாக்குதலை தொடர்ந்து அகதிகள் விவகாரத்துறை அமைச்சக அலுவலகத்திற்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி

## பாரதியார் நூல்கள் குறித்து மோடி புகழாரம்

தமிழ் மொழியின் பொக்கிஷமாக பாரதியார் நூல்கள் அமைந்துள்ளன என்று, பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டினார்.

புதுடெல்லி, புதன்கிழமை (11) நடைபெற்ற நிகழ்ச்சியில், பாரதியாரின் படைப்புகள் அடங்கிய 23 பாகங்களை பிரதமர் வெளியிட்டார்.

மத்திய கலாச்சாரத் துறையின் கீழ் அமைந்துள்ள சாகித்ய அகாடமி சார்பில் பிரதமரின் அரசு இல்லத்தில், இதற்கான நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது.

இந்த தொகுப்பில் சுப்பிரமணிய பாரதியின் எழுத்துகளின் பதிப்புகள், விளக்கங்கள், ஆவணங்கள், பின்னணி தகவல்கள் மற்றும் தத்துவ விளக்கக் காட்சி போன்ற விவரங்கள் இடம் பெற்றுள்ளன.




ராஜஸ்தான்

## ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் 55 மணிநேர போராட்டத்துக்கு பிறகு மீட்பு

ராஜஸ்தானில், ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த 5 வயது சிறுவன், 55 மணிநேர போராட்டத்துக்கு பிறகு பத்திரமாக மீட்கப்பட்டான்.

ராஜஸ்தான் மாநிலம், தவுசா பகுதியில் அமைந்துள்ள கலிகாட் கிராமத்தில், கடந்த 9ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில், வயலில் விளையாடிக்கொண்டிருந்த ஆர்யன் என்ற 5 வயது சிறுவன் 150 அடி ஆழமுள்ள ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்தான்.

இதையறிந்த கிராம மக்கள், பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தேசிய மீட்பு படையினர் சிறுவனை மீட்கும் பணியில் 2 நாட்களாக விடிய, விடிய ஈடுபட்டனர்.

முன்னதாக 150 அடி ஆழத்தில் கிடந்த சிறுவன்



சுவாசிக்க வசதியாக ஆக்சிஜனை குழாய் மூலம் அனுப்பி வைத்தனர். பின்னர், சிறுவனின் ஒவ்வொரு அசைவு மற்றும் நடவடிக்கைகளை கண்காணிக்க கமெராக்களை குழிக்குள் இறக்கி பொருத்தினர்.

இந்த நிலையில், கிணற்றில் துளையிடும் எந்திரங்களைப் பயன்படுத்தி குழிகள் தோண்டப்பட்டு வீரர்கள் உள்ளே இறங்கி, 150 அடி ஆழமுள்ள ஆழ்துளை கிணற்றில் விழுந்து கிடந்த சிறுவனை 55 மணி நேர போராட்டத்துக்கு பின்னர், உயிருடன் மீட்டுள்ளனர்.




நாளை ஆரம்பிக்கிறது மூன்றாவது டெஸ்ட்:

# அவுஸ்திரேலியாவை வீழ்த்துமா இந்தியா?

அவுஸ்திரேலிய, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியானது பிறிஸ்பேணில் நாளை காலை 5.50 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இந்தியாவும், இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலியாவும் வென்ற நிலையில் தொடர் சமநிலையாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதற்கான போட்டியில் இந்தியாவும், அவுஸ்திரேலியாவும் போட்டியில் இருக்கின்ற நிலையில் இப்போட்டி முக்கியத்துவம் பெறுகின்றது.

அதிலும் இத்தொடரில் எஞ்சியிருக்கின்ற மூன்று போட்டிகளில் இரண்டில் வென்று மற்றையதில் தோல்வியைத் தவிர்த்தாலே நேரடியாக இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற முடியும்.

அந்தவகையில் இந்தியாவின் வெற்றிக்கு அணித்தலைவர் றோஹித் ஷர்மா, சிரேஷ்ட வீரரான விராட் கோலி ஆகியோர் பெரிய இனிங்ஸ்களை ஆட வேண்டியுள்ளதுடன், ஜஸ்பிரிட் பும்ராவுக்கு ஏனைய பந்துவீச்சாளர்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டியுள்ளனர்.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் ஹர்ஷித் ரானாவை ஆகாஷ் டீப் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணியில் ஸ்கொட் போலண்டை உபாதையிலிருந்து குணமடைந்த ஜொஷ் ஹேசில்வூட் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வணியைப் பொறுத்த வரையில் ஸ்டீவ் ஸ்மித்திலிருந்தான ஓட்டங்களே அவ்வணியின் குறைபாடாக தற்போதைய நிலையில் காணப்படுகிறது.

முதலாவது போட்டியில்

## ஆப்கானிஸ்தானை வென்ற சிம்பாப்வே

ஆப்கானிஸ்தானுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஹராரேயில் புதன்கிழமை (11) நடைபெற்ற முதலாவது போட்டியில் சிம்பாப்வே வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்


ஆப்கானிஸ்தான்: 144/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: கரிம் ஜனட் ஆ.இ 54 (49), மொஹமட் நபி 44 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: றிச்சர்ட் நகரவா 3/28 [4], வெலிங்டன் மஸகட்ஸா 1/18 [3], பிளஸிங்க் முஸர்பனி 1/26 [4], சிகண்டர் ராசா 0/24 [4])



சிம்பாப்வே: 145/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பிரயான் பென்னிட் 49 (49), டியோன் மையர்ஸ் 32 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: நவீன்-உல்-ஹக் 3/33 [4], ரஷீட் கான் 2/26 [4], மொஹமட் நபி 1/13 [2], பரீட் அஹ்மட் 0/14 [2], முஜீப் உர் ரஹ்மான் 0/23 [4])

போட்டியின் நாயகன்: பிரயன் பென்னிட்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.



## சம்பியன்ஸ் லீக்: ஜூவென்டஸிடம் தோற்ற சிற்றி

### டொட்டமுண்டை வென்ற பார்சிலோனா

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், இத்தாலிய சீரி ஏ கழகமான ஜூவென்டஸின் மைதானத்தில் வியாழக்கிழமை (12) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

ஜூவென்டஸ் சார்பாக டுஸன் விளாகோவிச், வெஸ்டன் மக்கென்னி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா வென்றது. பார்சிலோனா சார்பாக பெரன் டொரஸ் இரண்டு கோல்களையும், றபீனியா ஒரு கோலையும் பெற்றதோடு, டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் செர்ஹௌ குய்ரஸி பெற்றிருந்தார்.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற பிரெஞ்சு லீக் 1 கழகமான மொனாக்கோவுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

நியூசிலாந்து எதிர் இங்கிலாந்து:

## நாளை ஆரம்பிக்கிறது மூன்றாவது டெஸ்ட்

நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியானது ஹமில்டனில் நாளை அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் வென்று தொடரை இங்கிலாந்து ஏற்கெனவே கைப்பற்றியுள்ள நிலையில், சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதற்கான போட்டியிலிருந்து நியூசிலாந்து வெளியேற்றப்பட்டுள்ளது.



இந்நிலையில் தனது குழந்தை பிறப்புக்காக இப்போட்டியை டெவோன் கொன்வே தவறவிடவுள்ள நிலையில் அவரை அணியில் வில் யங் பிரதியிடவுள்ளார்.

இத்தொடரில் டிம் செளதி மோசமாகச் செயற்பட்டபோதும் இப்போட்டியுடன் அவர் ஓய்வு பெறுகின்ற நிலையில அவர் அணியில் இடம்பெறுவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபக்கமாக இங்கிலாந்து அணியில் மாற்றமெதுவுமிருக்காதெனக் கருதப்படுகின்றபோதும் ஸக் குறோலியிடமிருந்து நியூசிலாந்து மண்ணில் ஓட்டங்களை இங்கிலாந்து எதிர்பார்க்கிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 13, டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.